வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P.1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk
மலர் : 06
23.02.2025 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 54
பக்கங்கள் : 16




# மக்கள் பாதுகாப்புக்கு அரசே முழுப் பொறுப்பு

## அமைச்சர் விஜேபால உறுதி

கொழும்பு, பெப்ரவரி 23

**நாட்டு மக்களின் பாதுகாப்பின் பொறுப்பை அரசாங்கம் பொறுப்பேற்கிறது. தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. நீதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. பலப்படுத்தப்பட்டுள்ளதென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாதாளக் குழுக்களின் செயற்பாடு தீவிரமடைந்துள்ளது, மனித படுகொலைகள் சாதாரணமாகி விட்டது, பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக் கப்பட்டுள்ளது.

ஆகவே, தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை தெளிவுபடுத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

15



## நாகை - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை நேற்று மீள ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப். 23

நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து 83 பயணிகளுடன் நேற்று காங்கேசன்துறையை வந்தடைந்தது சிவகங்கை கப்பல். இந்தக் கப்பல் நேற்று மதியம் 12.15 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

இந்தியா - இலங்கை இடையிலான இரு நாட்டு கலாசாரம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 2023 ஆண்டு ஒக்ரோபர் மாதம் நாகையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு புதிய பயணிகள் கப்பல் சேவை தொடக்கப்பட்டது.

இது சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் இடையே பெரும் வரவேற்பை பெற்ற

15

## புலிகள் உட்பட 15 அமைப்புகளை தடைப் பட்டியலில் நீடித்தது அரசு!

கொழும்பு, பெப். 23

விடுதலைப் புலிகள் உட்பட 15 பயங்கரவாத அமைப்புகளைத் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் நீடிக்கும் வர்த்தமானி அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்தாவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட அமைப்புகள் அமைப்புகள் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு மீண்டும் நிதி வழங்குவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், அந்த அமைப்புகளின் நிதி சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் முடக்கப்பட்டுள்ளன பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 222 நபர்களின்

15

## வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி: விவரங்கள் பதிவு செய்த பொலிஸார்!

வவுனியா, பெப். 23

நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலயப் பூசகர் மதிமுகராசா மற்றும் முக்கியஸ்தரான பூபாலசிங்கம் ஆகியோர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல்பொருட்திணைக்களத்துக்கு

15



## பயங்கரவாதச் சட்டத்தை இப்போது நீக்க முடியாது!

### பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த

கொழும்பு, பெப். 23


சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாமல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க முடியாதென பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் 58 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்

15



## மன்னார் புதிய ஆயராக நேற்று ஞானப்பிரகாசம் அருட்பொழிவு

மன்னார், பெப். 23

மன்னார் மறை மாவட்டத்தின் நான்வது ஆயராக தெரிவு செய்யப்பட்ட அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் நேற்று ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளாரின் அருட்பொழிவும் திருப்பலியும் நேற்று காலை 9.30 மணியளவில், மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், மன்னார் மடு திருத்தலத்தில் இடம் பெற்றது.

இதில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பிறைன் உடக்வே ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஏனைய மறை மாவட்ட

15

## வடக்கு மக்கள் நிலை அறிந்து விகாரைப் பிரச்னைக்கு தீர்வு!

### ஜனாதிபதி அநுரகுமார உறுதி

கொழும்பு, பெப். 23

குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சில வழிபாட்டு ஸ்தலங்களை

15

## யாழில் இறுதி ஊர்வலத்தில் வாகனம் மோதி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணத்தில் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 05 பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் மத்தியை சேர்ந்த சோதிலிங்கம் கஜேந்திரன் (வயது 30) என்பவரே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பகுதியில் அண்மையில்

15

## நாட்டை சீர்குலைப்போர் மீது சட்டம் கடுமையாகப் பாயும்!

### பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர்



கொழும்பு, பெப். 23

நாட்டை சீர்குலைக்கும் நோக்கில் எடுக்கப்படும் எந்த வொரு நடவடிக்கைக்கும் இடமளிக்கப்படமாட்டாது என்றும், அத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் விரைவில் இல்லாதொழிக்கப்படும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி. செனவிரத்ன தெரிவித்தார்.

நாட்டை சீர்குலைக்கச் செயல்படும் குழுக்கள்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கட்சிகள் போன்று ஒருபோதும் செயல்படாதீர்!

## தொழிற்சங்கங்களுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்.23

தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் போன்று ஒருபோதும் செயல்படக்கூடாது. தொழிற் சங்கங்களும் உரியவகையில் சேவையாற்றிக்கொண்டே அதை மேம்படுத்தும் வகையில் தங்களுக்கான தேவைப்பாடு களை கோர வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண தொழில் நுட்ப சேவையாளர் சங்கம், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் சங்கம், வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் என்பனவற்றின் பிரதிநிதிகள், ஆளுநரை ஆளுநர் செயலகத் தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

கொடுப்பனவுகளை அதிக ரித்தல், இடமாற்றங்கள் தொடர் பில் அனைத்து தொழிற் சங்கப் பிரதிநிதிகளாலும் கோரிக்கை முன்வைக்கப்பட் டது. இதன் போது, கொடுப்பனவு அதிக ரிப்பு மீளாய்வுக்கு இணக்கமும் தெரிவிக்கப்பட்டது. இட மாற்றங்களும் சம்பந்தப் பட்ட தொழிற்சங்கங்களுடன் ஆராய்ந்து முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தொழில் நுட்ப சேவையாளர் சங்கச் செயல்பாடுகளை ஆளுநர் பாராட்டினார். அத்துடன் சங்கத்தின் கோரிக்கைக்கு அமை வாக சிறப்பாகச் செயல்படும் உத்தியோகத்தர்களுக்கான மெச் சுரை சான்றிதழ் வழங்கவும் ஆளு நர் இணக்கம் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தர் சங்கம் தமது திருத் தப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பு தொடர்பான ஆட்சே பனைகளை முன்வைத்திருந்த னர். மேலும், மூன்றிலொரு பகுதி ஆளணி வெற்றிடமாக வுள்ள நிலையிலும், தம்மிட மிருந்து நூறு சதவீத சேவை எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்கள் இதன்போது சுட்டிக் காட்டினர். இது சாத்தியமில் லாத விடயம் எனவும் தெரி வித் தனர். வதிவிடப் பயிற்சி நெறி நிறுத்தப்பட்டுள்ளமை தொடர் பிலும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். ஆளணி வெற்றிடத்துக்கு சில மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தாக அதிகாரிகளால் தெரிவிக்கப் பட்டதுடன் வதிவிடப் பயிற்சி நெறியை தற்போதைய காலத் துக்கு ஏற்ப மாற்றியமைக்கவும் இணக்கம் காணப்பட்டது.

கூட்டுறவில் ஒரு காலத்தில் வடக்கு மாகாணம் கொடி கட் டிப் பறந்ததாகக் குறிப்பிட்ட ஆளுநர், தற்போது அது பின்ன டைவான நிலைமையை அடைந் துள்ளதாகவும் கூறினார். அதை உயர்த்தும் பொறுப்பு கூட்டு றவு அபிவிருத்தி உத்தியோகத் தர்களும் உண்டு. சமூகப் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். அதேபோல இன் னும் வினைத்திறனாகச் செயல் பட எவ்வாறான சட்டத்திருத் தங்கள் செய் யப்படவேண்டும் என்பதையும் பரிந்துரைக்கு மாறு ஆளுநர் இதன்போது கோரினார்.

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தால் கோரப் பட்ட தளபாடவசதிகள், காகி தாதிகள் என்பனவற்றை வழங்கு வதற்கு இணக்கம் காணப்பட் டது. மேலும், களத்தரிசிப்பு கொடுப்பனவு தொடர்பில் நில வும் முரண்பாடுகளை சீர்செய்ய வும் உறுதியளிக்கப்பட்டது. தேசியமட்ட நிலைப்பாட்டுக்கு அமைவாக ஆசிரிய வளவாளர் கள் என நியமிப்பதை விடுத்து பதில் ஆசிரிய ஆலோசகர்கள் என்ற பதவிநிலைக்கு நியமிக்க வடக்கு மாகாண கல்வி அமைச் சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் இணக்கம் வெளியிட் டார். (எ)




மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை கல்லூரி மைதா னத்தில் அதிபர் து. திலீப்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் எந்திரி. க. கணேசமூர்த்தி கலந்து சிறப்பித்தார்.

# பவள விழாவை முன்னிட்டு தேசிய ரீதியில் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.23

சாவல்கட்டு மகாத்மா சனச மூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு - பவள விழாவை முன் னிட்டு தேசிய ரீதியில் பல் வேறு நிகழ்வுகளை நடத்த திட் டமிட்டுள்ளதாக குறித்த நிகழ்வுகளின் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது.

இதன்போது ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணம், ஆனைக் கோட்டை சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையமா னது கடந்த 1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

75 ஆவது ஆண்டை அடுத்த மாதம் (07. 03. 2025) எட்ட வுள்ளது.

இந்த நிலையில், பவள விழாவை பிரமாண்டமான முறையில் நடத்த ஏற்பாடு செய்துள்ள நிலையில் தேசிய ரீதியில் பல விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. இதனடிப்படையில் எதிர்வரும்

28 ஆம் திகதி காலை 7 பிரிவுகளில் நீச்சல் போட்டியும் பிற்பகல் 03. 00 மணிக்கு கயிறு இழுத்தல் போட்டியும் நடை பெறவுள்ளன. இதேவேளை,

மரதன் ஓட்ட நிகழ்வு எதிர் வரும் முதலாம் திகதி காலை 06.00 மணிக்கும், சைக்கிள் ஓட்டம் காலை 07.30 மணிக் கும் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதேவேளை வலிகாமம் பிரதேச ரீதியில் உதைபந் தாட்ட போட்டியும், சிறுவர்க ளுக்கான பல்வேறு நிகழ்வுக ளும் நடைபெறவுள்ளன.

இறுதி நிகழ்வுகள் மார்ச் மாதம் 7 ஆம் திகதியன்று பல்வேறு உயரதிகாரிகள் கல்விப் புலம் சார்ந்தோர் பங்கேற்புடன் நடைபெறவுள்ள தாகவும் ஏற்பாட்டுக் குழு அறி வித்துள்ளது. (எ-05)

# ‘வனமெல்லாம் புதிர்’ நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 23

சிறந்த அறிவியல் புனை கதை இலக்கியத்திற்காக 2024 ஆம் ஆண்டு சாஹித்திய மண் டல விருதை பெற்ற ஜனகா நீக்கிலாஸின் ‘வனமெல்லாம் புதிர்’ நூலின் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 03.00 மணிக்கு கிளிநொச்சி திறன்விருத்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு பேரவையின் இலங்கை கிளை யினது தலைவர் அருணாசலம் சத்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ் வில், யாழ். பல்கலைக்கழகத் தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, படைப்பாளி யும் சமூக செயல்பாட்டாளரு மான வெற்றிச்செல்வி - சந்திர கலா ஆகியோர் உரையாளர்க ளாக கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டத்தை மீறும் அழகக நிலைய உரிமம் இரத்துச் செய்யப்படும்!

யாழ்ப்பாணம், பெப்.23

வடக்கு மாகாண உள்ளூ ராட்சி அதிகார சபைகளின் நிய மத்துணை விதிகளின் சட்ட ஏற் பாட்டில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை மீறிச் செயல் படும் அழகக நிலையங்களின் உரிமம் இரத்துச் செய்யப்படும் என வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழில் உள்ள ஆளுநர் செய லகத்தில் வடக்கு மாகாண அழ கக சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடை பெற்றது. ஒரு சில அழகக நிலை யங் கள் சங்கத்தின் கட்டுப்பாடு களை மீறிச் செயல்படுவது தொடர்பில் ஏற்கனவே ஆளு நருக்கு தெரியப்படுத்தப்பட்டி ருந்த நிலையில் இதற்கமைவாக இந்தக் கூட்டம் ஒழுங்குபடுத் தப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி மன்றங்களால் உரிமம் வழங்கப்படும்போது உள்ளூராட்சி மன்ற அதிகார எல்லைக்குள் சிகை அலங்க ரிப்பு நிலையங்கள், நாவிதன் கடைகள், அழகுக்கலை நிலை யங்களை நடத்திச் செல்வதை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத் தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர் பான நியமத்துணை விதிகளின்



அடிப்படையிலேயே ஒவ் வோர் ஆண்டும் உரிமம் வழங் கப்படுவதாக உள்ளூராட்சி அமைச்சின் செயலர் சுட்டிக் காட்டினார்.

இந்த நியமத்துணை விதி யின் கீழ் பாடசாலை மாண வர்களுக்கான தலைமுடி வெட் டுதல் கூட எவ்வாறு அமைய வேண்டும் எனத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளதால் அதற் கமைவாகவே அனைத்து அழ கக நிலையங்களும் செயல்பட முடியும் எனவும் ஆளுநரும் இதன்போது சுட்டிக்காட்டி னார். இதன்போது, நியமத் துணை விதியை மீறும் அழகக நிலையங்கள் தொடர்பில் அழகக சங்கங்கள் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு முறைப்பாடு செய்ய முடியும் என ஆளுநர் குறிப்பிட்டார். இதற்கமைவாக அத்தகை அழ கக நிலையங்களின் உரிமத்தை உள்ளூராட்சி மன்றங்கள் எதிர் காலத்தில் இரத்துச் செய்ய முடி யும் எனவும் கூறினார்.

அழகக நிலையங்கள் தொடர்பான முறைப்பாடுக ளைத் தெரிவிப்பதற்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றை யும் வழங்கினார். அந்த இலக் கத்துக்கு முறைப்பாடுகள் தெரி விக்கப்பட்டால் பொதுச்சுகா தாரப் பரிசோதகர்கள் ஊடாக வும் சோதனைகளை மேற் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சில பெற்றோர் தமது பிள் ளைகளுக்கு இவ்வாறுதான் தலைமுடி வெட்ட வேண்டும் என நிர்ப்பந்திக்கின்றனர் என அழகக சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இதன்போது கருத்து வெளியிட்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர், சட்டத்தில் இவ்வாறு தான் தலைமுடியை வெட்ட முடியும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அதை மீறினால் அழகக நிலைய உரிமையாள ரின் உரிமமே இரத்துச் செய்யப் படும் எனச் சுட்டிக் காட்டிய துடன், பெற்றோருக்கும் இதை தெரியப்படுத்துமாறு குறிப் பிட்டார். (எ)

# ஆசிய குத்துச்சண்டை போட்டிக்கு வவுனியாவை சேர்ந்த ஐவர் தகுதி



கொழும்பு, பெப்.23

ஆசிய குத்துச்சண்டை போட்டிக்கான தெரிவுப் போட் டியில் வவுனியா மாவட் டத்தை சேர்ந்த ஐவர் தகுதி பெற்றுள்ளனர்.

22 வயதுக்குட்பட்ட ஆண் கள் மற்றும் பெண்களுக்கான தகுதிகாண் போட்டியானது கொழும்பு றோயல் கல்லூரி யில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நிக்சன் ரூபராஜ்ஜின் பயிற்சியின் கீழ் வவுனியா மாவட்ட குத்துச் சண்டை கழகம் மற்றும் ஒமேகா லைன் குத்துச்சண்டை கழகம் என்பன வவுனியா மாவட்டம் சார்பில் பங்கேற்றன.

இதேவேளை, இளைஞர் விவகார மற்றும் விளையாட் டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவுக்கும் வவுனியா மாவட்ட குத்துச்சண்டை கழ கத்தினருக்கும் இடையே விசேட சந்திப்பொன்றும் நடை பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, வரும் காலங்களில் போட்டி களில் பங்கேற்கும் வீரர்களுக் கான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவள திணைக்களம் வசமுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும்

## அநுர அரசிடம் வெல்வேரி கிராம மக்கள் கோரிக்கை

திருகோணமலை, பெப்.23

**வனவள பாதுகாப்புத் திணைக்களத்தால் கற்கள் இடப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீக காணி களை விடுவித்து தமது வாழ்வாதாரத்துக்கு உதவுமாறு வெல்வேரி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



திருகோணமலை - வெல்வேரி கிராமத்தில் பல தசாப்த காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வாழ்ந்து வந்த மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனர்.

கடந்த 1983ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் மீளக் குடியமர அனுமதிக் கப்படாத நிலையில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறித்த பகுதியில் வனவள பாதுகாப்புத் திணைக்களம் எல்லைக் கற்கள் நட்டுள்ளதாக மக்கள் கூறினர்.

1970 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே 30இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்ததாகவும், வனவள பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப் பட்டுள்ள பகுதிக்குள் தாங்கள் வாழ்ந்ததமைக்கான அடையாளங்களாக வீட்டின் சிதைவுகள், சீமெந்தால் கட்டப்பட்ட சுமார் 10 அடி விட்டமுடைய பல கிணறுகள், நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்ட கால்வாய்கள் உட்பட பல ஆதாரங்களும் தமது காணிக்கான ஆவணங்களையும் வைத்திருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் தமது காணியைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் குறுகிய பரப்பளவைக் கொண்ட தமது காணிகள் மாத்திரம் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்படாமல் இருப்பதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, வனவள பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப் படுத்தப்பட்டுள்ள சுமார் 40 ஏக்கருக்கு மேற்பட்ட தமது பூர்வீக காணிகளை விடுவித்து, தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோடு நாட்டின் நெல் உற்பத்திக்கு பங்களிப்புச் செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்குமாறும் அநுர அரசிடம் கோரிக்கை விடுப்பதாக மக்கள் கூறினர். (எ)



# பாடசாலை உட்கட்டமைப்பை விருத்தி செய்ய நடவடிக்கை

வவுனியா, பெப்.23

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியாவிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.


இதற்கமைவாக வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் படையினரின் பங்கேற்புடன் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் பாடசாலையின் அதிபர் எம். எம். அன்பஸ் தலைமையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா பம்பைமடு பகுதியிலிருந்து வருகை தந்த இராணுவத்தினர், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுடன் இணைந்து பாடசாலையின் சூழல், குடிநீர் விநியோகம், மலசல கூடம், மைதானம் என்பனவற்றை சுத்தம் செய்து திருத்த வேலைகளும் மேற்கொள்ளப் பட்டதுடன், பாடசாலையில் அபாயமாக இருந்த மரங்களும் அகற்றப்பட்டன.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் இந்த மாத ஆரம்பத்தில் குறித்த பாடசாலைக்கு சென்று பார்வையிட்ட பின்னர், அவர் விடுத்த பணிப்புரைக்கு அமைவாகவே கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-10)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த அருளுரை





யாழ்ப்பாணம், பெப்.23

சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நேற்று முன்தினம் ஆன்மீக அருளுரையாக 'மகாபாரதம்' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு ஆரம்பமாகியுள்ளது. இந்தச் சொற்பொழிவை ஆசிரியர் இரா. செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமை மகாபாரதம் தொடர் சொற்பொழிவு நடைபெறும் என சந்நிதியான் ஆச்சிரமம் அறிவித்துள்ளது. (எ-02)

## புதையல் தோண்டியவர் சிக்கினார்

மதவாச்சி, பெப்.23

அநுராதபுரம், மதவாச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வஹமல் கொல்லேவ பிரதேசத்தில் சட்டவிரோதமாக புதையல் தோண்டிய நபர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ)

# நூலகத்துக்கு சொந்தமான காணியை முழுமையாக விடுவிக்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.23

கிளிநொச்சி நகரில் உள்ள நூலகத்துக்கு சொந்தமான காணியை முழுமையாக விடுவிக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலையையும், மக்களது வாழ்வாதார நிலைமைகளையும் கருத்தில் கொண்டு இம்முறை முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டத்தை வரவேற்பதாகவும் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான தனது எதிர் பார்ப்பையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படையில், வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ள விடயங்கள் தொடர்



பில் தங்களது அவதானத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக யாழ்ப்பாணம் பொது நூலகத்தை மிக அதிக மானோர் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை நீங்களே உங்களது உரையில் கூறியிருக்கிறீர்கள்.

அதற்கென இம்முறை 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளீர்கள்.

அதனைப் பயன்படுத்தி நூலகத்தை முழுமையாக டிஜிற்றல் மயப்படுத்துவதன் மூலமாக, இன்றைய மற்றும் எதிர்காலத் தலைமுறையினர் இலகுவாக இந்த நூலகத்தை பயன்படுத்தும் நிலையை உருவாக்க முடியும் என்பதுடன், ஆவணங்களைப் பாதுகாத்து, பராமரிப்பதற்கும், இடவசதியைப் பேணுவதற்கும் வசதியாக இருக்கும்.

அதேபோன்று, கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள நூலகத்துக்கு சொந்தமான காணி இராணுவத்தின் வசமிருந்த நிலையில், சில வருடங்களுக்கு முன்னர் குறித்த காணியின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டு, கரைச்சி பிரதேச சபையால் கட்டடம் கட்டப்பட்ட போதிலும், குறித்த கட்டடம் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

எனவே, குறித்த கட்டடத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நூலகத்தை மக்கள் பாவனைக்கு கையளிப்பதுடன், நூலகத்துக்கான எஞ்சிய காணியை விடுவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன் - என்று அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ-05)

# வெளிநாட்டவர்களை இலக்கு வைத்து பண மோசடியில் ஈடுபட்ட பெண் கைது

## யாழில் நடந்த நூதன மோடி

யாழ்ப்பாணம், பெப்.23

வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களிடம், போலி மருத்துவ அறிக்கைகளை காண்பித்து பண மோசடியில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மோசடியாக பெற்றிருந்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

யாழ். நகரப் பகுதி மற்றும் புறநகர் பகுதிகளான திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், கொக்குவில் உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கும் நபர்களின் வீடுகளை இலக்கு வைத்து சென்ற குறித்த பெண், தான் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் எனவும், தனக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது என போலியான மருத்துவ அறிக்கைகளை காண்பித்து பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற பெண், தனக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள பண உதவி தேவை எனக் கூறி 50 ஆயிரம் ரூபாய் பணத்தை மோசடியாக பெற்றுச் சென்றுள்ளார்.

பணத்தை கொடுத்த வெளிநாட்டவர், அது தொடர்பில் தனது உறவினர்களுக்கு தெரிவித்த போதே, குறித்த பெண் வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த வேறு நபர்களிடமும் பணத்தை வாங்கியுள்ளமையை உறவினர்கள் கூறியுள்ளனர்.

இதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்ட விடயம் வெளிநாட்டிலிருந்து வந்தவருக்கு தெரிய வந்ததை அடுத்து, பொலிஸாருக்கு பெண்ணின் மோட்டார் சைக்கிள் இலக்கம், பெண் தொடர்பான அடையாளங்களை தெரிவித்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57 பாதாள உலக கும்பல்கள் நாட்டில் செயல்படுகின்றன

## பதில் பொலிஸ்மா அதிபர் அதிர்ச்சி தகவல்

கொழும்பு, பெப்.23

நாட்டில் தற்போது 57 பாதாள உலகக் கும்பல்கள் செயல்படுவதாகவும் அவற்றுக்கு சுமார் 1,400 பேர் உதவியாளர்களாக உள்ளனர் என்று புலனாய்வுத் தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.



கொழும்பிலுள்ள தகவல் ஊடக அமைச்சில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு 75 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும், 18 கத்திக்குத்து சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாண்டு இதுவரையில் 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும், 5 கத்திக்குத்து சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (எ)

# கொலைச் சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும்

## சபையில் சஜித் வலியுறுத்தல்

கொழும்பு, பெப்.23

நாடு முழுவதும் கொலைச் சம்பவங்கள் நடந்து வரும் நிலையில் நாட்டு மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் உயிருக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சமூகத்தில் அனைவரும் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். சட்டம் ஒழுங்கு அமைச்சர் இது குறித்து கருத்து தெரிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிள்ளைகள் மற்றும் ஒட்டுமொத்த சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் முறையான வேலைத்திட்டத்தை முன்வையுங்கள். நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் பாதுகாப்பு கூட பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் சஜித் கூறினார்.(எ)

# மின்சார கட்டணத்தை குறைக்காவிடின் மின்சார சபையை காணாமலாக்குவோம்

## முன்னாள் எம். பி. உதய கம்மன்பில

கொழும்பு, பெப். 23

மின்சார கட்டணம் குறைக்கப்படாவிட்டால் மின்சார சபையை காணாமலாக்குவதற்கு நுகர்வோரான எம்மால் முடியும் என்பதை மறந்து விட வேண்டாம். வலுசக்தி மாபியாக்களின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து தீர்மானங்கள் எடுக்கப்படும் கலாசாரம் மாற்றப்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாம் அமைச்சு பதவிகளை வகித்த போது, தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு முரணாக செயல்பட்டால் அதற்கெதிராக அமைச்சரவையிலும் குரலை முழுப்பியிருக்கின்றோம். ஆனால், தற்போது அவ்வாறு இல்லை. திரவ எரிவாயு விலை மனு



கோரல் தொடர்பில் இறுதியில் நாமே எமது அமைச்சரவைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடினோம். இதனால் நாம் அமைச்சுப்பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டோம்.

எரிபொருள் மாபியாக்களே இலங்கையில் மாத்திரமின்றி உலகலாவிய ரீதியில் ஆட்சி கவிழ்ப்பில் பெரும் பங்கினை வகிக்கின்றன. எவ்வாறிருப்பினும் எமது நாட்டிலுள்ள சூழவியல் நிபுணர்களுக்கு இவர்களை எதிர்ப்பதற்குள்ள தைரியம் பாராட்டுக்குரியது. வர்த்தகர்கள், அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளும் இதில் தொடர்புபட்டுள்ளனர்.

வலுசக்தி துறை தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரைகளை மீட்டிப்பார்த்தால் இதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் யார் என்பதை அறிந்து கொள்ளலாம். மின்சார திருத்த சட்டத்தில் முன்னர் காணப்பட்ட "ஆகக்குறைந்த கட்டணம்" என்ற சொல் "நியாயமான கட்டணம்" என மாற்றப்பட்டுள்ளது. இது ஆட்சியாளர்களுக்கு சாதகமாக மாற்றப்பட்டுள்ளது. இதுவும் மாபியாக்களின் செயல்பாடே. எனவே மின்சாரக் கட்டணம் குறைக்கப்படாவிட்டால் மின்சார சபையைக் காணாமலாக்குவதற்கு நுகர் வோரான எம்மால் முடியும் என்பதை மறந்து விட வேண்டாம் - என்றார். (ஐ)

# 739 மனிதர்கள், 2018 யானைகள் கடந்த 4 வருடங்களில் மரணம்!

கொழும்பு, பெப். 23

2021ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான நான்கு வருடங்களில் யானை - மனித மோதல்களால் 739 மனிதர்களும் 2018 யானைகளும் உயிரிழந்தன என்று சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான நான்கு வருட காலப் பகுதியில் காட்டு யானைகள் தாக்கியதில் 1578 மனிதர்கள் பாதிக்கப்பட்டனர். 739 பேர் மரணமடைந்தனர். அத்துடன், இந்த 4 வருடங்களுக்குள் 2018 யானைகளும் உயிரிழந்தன.

நாட்டில் தொடரும் யானை - மனித மோதல்களுக்கு நிரந்தர மற்றும் விஞ்ஞானபூர்வமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மின்சார வேலிகளை அமைத்தல், யானைகள் உள் வரும் பகுதிகளில் காவலரண்களை உருவாக்கி யானைகளை துரத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், யானைகள் செல்லும் வழிகளை இனம் கண்டு முறையாக அதனை அமைத்து அவற்றுக்கு வாய்ப்பளித்தல், யானை - மனிதன் மோதல்களை தடுப்பதற்கு தேவையான பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை பின்பற்றுவதன் மூலம் யானைகளால் எதிர்கொள்ள நேரும் பாதிப்புகளையும் அழிவுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார். (ஐ)

# காலி கடலில் மூழ்கி ரஷ்ய பிரஜை பலி!

காலி, பெப்.23

காலி, ஹிக்கடுவை கடலில் மூழ்கி ரஷ்ய நாட்டு பிரஜை ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

38 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

மூன்று வெளிநாட்டுப் பிரஜைகள் இணைந்து ஹிக்கடுவை கடலில் நீராடிக் கொண்டிருந்த நிலையில், மூவரும் நீரில் மூழ்கி உயிருக்குப் போராடினர்.

இதனை அவதானித்த பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர், நீரில் மூழ்கிய மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளையும் காப்பாற்றி பலப்பிட்டி மருத்துவமனையில் சேர்த்த போது அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

# ஒன்றிணைந்த திட்டத்தின் ஊடாக யானை - ரயில் மோதலுக்குத் தீர்வு

கொழும்பு, பெப்.23

உலகளாவிய ரீதியில் காட்டு யானைகள் ரயில்களில் மோதுவதால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க பல வெற்றிகரமான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்திய ரயில்வே கூட வனஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து 'கவக்' என்ற வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. வெப்ப நிலையை கண்காணிக்கும் கமராக்கள் போன்றவைகளும் இங்கு பயன்படுத்தப்படுவதால் இதில் கவனம் செலுத்துங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கென்யா போன்ற நாடுகளில் தூண்களுக்கு மேலால் செல்லும் ரயில் வழித்தடங்களும், சுரங்க ரயில் பாதைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக தேனீக்கூடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் இந்த ஆபத்துக்களை குறைக்க முடியும்.

எனவே, வனஜீவராசிகள் அமைச்சும் போக்குவரத்து அமைச்சும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் வேலைத்திட்டமொன்றை நோக்கிச் செல்லுமாறும் சஜித் தெரிவித்தார். (எ)

# அநுராதபுரத்தில் நேற்று திடீரென தீப்பற்றிய பஸ்

## உறங்கிய ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம், பெப்.23

அநுராதபுரம் ஜேதவனாராமையிலுள்ள முதியோர் இல்லத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்ததில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸில் உறங்கிக் கொண்டிருந்த நபரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர். உயிரிழந்தவர் எம்பிலிபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடையவர் ஆவார்.

இந்த பஸ் நேற்றுக்காலை பலாங்கொடையிலிருந்து அநுராதபுரம் பழைய நகரத்துக்கு யாத்திரைக்காக வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (எ)

# சேதவத்த கசுனின் உதவியாளர் கைது

கொழும்பு, பெப்.23

டுபாயில் தலைமறைவாக உள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரருமான சேதவத்த கசுன் என்பவரின் உதவியாளர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நபர் கொழும்பு, முகத்துவாரம் போகஹ சந்திக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் கொழும்பு வெல்லம்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 11 கிராம் 500 மில்லிக் கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் வாள் என்பன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை ඊළනාඩු
குரோதி வருடம், மாசி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவுக்கான சவால்கள்

வடக்கு மக்களுக்கு நாமே நிரந்தரமானவர்கள் - ஏனைய நாடுகளை போன்று அவர்களது நலன்களுக்காக இங்கு வந்து செல்பவர்கள் அல்ல நாம் - உங்களுடைய நலன்களை கருத்தில் கொண்டே நாம் யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகத்தை 2010இல் ஆரம்பித்தோம் - ஏனைய நாடுகளின் இராஜதந்திர உறவுகளுக்கும் எங்களும் இடையில் வேறுபாடுண்டு - நாங்களே இங்கு நிரந்தரமானவர்கள் - இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்திருக்கின்றார்.

வடக்கு நோக்கி சீனாவின் வரவு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற நிலையில்தான், இவ்வாறானதொரு கருத்தை அவர் தெரிவித்திருக்கின்றார் என்பதை ஊகிப்பது கடினமானதல்ல. 2021இல், இலங்கைக்கான சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கான முதல் விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அது ஒரு வெள்ளோட்ட வருகையாக இருந்தது.

சீனத் தூதுவர் வருவதற்கு முன்னரே சீனாவின் முதலீடுகள் அங்கு வந்துவிட்டன. வடக்கின் மீன்பிடித் துறையில் புதிய ஏற்றுமதிக்கான வாய்ப்பாக, கடலட்டை பண்ணைத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. கடலட்டைத் தொழில் யாழ்ப்பாணத்துக்கு புதிது அல்ல என்றாலும் அதனை கிழக்காசிய சந்தைகளை நோக்கி ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை சீனாவே ஏற்படுத்தியது. கடலட்டை உணவுப்பொருட்கள் இந்தியாவிலோ மேற்குலக நாடுகளிலோ உணவுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அதற்கான சந்தை கிழக்காசிய நாடுகளில்தான் இருக்கின்றது - குறிப்பாக சீனாவில் கடலட்டை உணவுகள் விலைமிக்கவை.

வடக்கு மாகாணத்தின் மீது, குறிப்பாக வடக்கின் மீன்பிடித் துறையின் மீது சீனாவின் கவனம் திரும்பியது தற்செயலான ஒரு விடயமோ, எதேச்சையாக திட்டமிட்டப்பட்ட விடயமோ அல்ல என்பதையும் புரிந்து கொள்வதும் கடினமானதல்ல. எனினும், புதிய வருவாயை ஈட்டுவதற்கான வாய்ப்பு கிடைகின்றபோது, உள்ளூர் வர்த்தகர்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பர் என்பதும் இயல்பானதே.

சீனத் தூதுவரின் முதல் விஜயத்தின் போது, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, 20 மில்லியன் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இது ஆரம்பம் என்பதை அழுத்திக் குறிப்பிட்டிருந்த சீனத் தூதுவர், அதனைத் தொடர்ந்து, இரண்டு தடவைகள் வடக்குக்கு விஜயம் செய்திருக்கின்றார். இந்தப் பின்புலத்தில், சீனாவுக்கும் வடக்கு மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் முயற்சிகளில், முன்னர் எப்போதும் இல்லாதளவுக்கு இலங்கைக்கான சீனத் தூதரகம் ஆர்வம் காண்பித்து வருகின்றது என்பதும் அவதானிப்பதற்கு கடினமான விடயமல்ல. இந்த விடயங்கள் இந்தியாவுக்கு மகிழ்சியான விடயமல்ல.

இதுவரையில் தென்னிலங்கையின் மீதே சீனாவின் பிரதான கவனம் இருந்தது. அங்குதான் சீனாவின் பெரும் முதலீட்டுத் திட்டங்கள் இருக்கின்றன - அதற்குமப்பால் மூலோபாய முக்கியத்தும் மிக்க திட்டங்கள் காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் இந்தியாவின் பெரும் திட்டங்களே உரையாடலில் இருக்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் படியும், இந்தியாவுக்கு உரித்துடன் கூடிய ஈடுபாடுக்குரிய இடமாகும்.

ஆனால், வடக்கு கிழக்கை நோக்கியும் சீனா அதன் திட்டங்களை விரிவாக்க முயற்சிக்கின்றது. அடிப்படையில் இது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் மூலோபாய நலன்களின் வழியாக நோக்கினால் இது சிக்கலானதுதான். ஆனால், இதனை முற்றிலுமாக தடுத்து விடவும் முடியாது. இவ்வாறானதொரு நிலையில் சீனாவின் செல்வாக்கை ஓர் எல்லைக்குள் முடக்க வேண்டிய தேவை இந்தியாவுக்குண்டு. அதனடிப்படையில் இந்தியா சில விடயங்களை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தத்தில் இருப்பதை புரிந்துகொள்ளலாம்.

# இராணுவத்திலிருந்து விலகும் பலர் பாதாளக் குழுக்களுடன் தொடர்பு!

## பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 23

ஆயுதப் பயிற்சி பெற்ற பின்னர் சட்டவிரோதமாக இராணுவத்தை விட்டு வெளியேறும் பல நபர்கள் பாதாள உலக குழுக்களுடன் தொடர்பு கொள்ளும் போக்கு அதிகரித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்தகைய நபர்களைக் கைது செய்ய சிறிது காலத்திற்கு முன்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

ஆயுதப் பயிற்சி பெற்று இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களை மிகக் குறுகிய காலத்தில் கைது செய்யும் திறன் இராணுவத்திற்கும் பொலிஸாருக்கும் இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில், இந்த ஊடக சந்திப்பின் போது, சேவையில் உள்ள இராணுவ வீரர்கள் குற்றவாளிகளுடன் தொடர்பில் இருக்கிறார்களா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர், பொருளாதார நெருக்கடி மற்றும் போதைப்பொருள் பழக்கம் காரணமாக இராணுவ வீரர்கள் குற்றவாளிகளுடன் தொடர்பில் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக கூறினார்.

அதன்படி, எதிர்காலத்தில் அவர்களை அடையாளம் கண்டு கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# சஜித் பிரேமதாஸவை தவிர வேறொரு எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறாரா?

## அமைச்சர் பிமல் ரட்நாயக்க கேள்வி

கொழும்பு, பெப். 23

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை தவிர வேறு ஒரு எதிர்க்கட்சி தலைவர் இருக்கிறாரா என கட்சியின் பிரதம கொறடாவும், அமைச்சருமான பிமல் ரட்நாயக்க சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றம் நேற்று கூடிய போது அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலையியில் கட்டளை 22 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் கேட்ட கேள்விக்கு அரச தரப்பினர் தகுந்த பதில் அளித்திருந்தனர். அவ்வாறு இருக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சியை சார்ந்த வேறொரு உறுப்பினருக்கு கேள்வி கேட்பதற்கு அதிகாரம் இல்லை.

அந்த விடயத்தையே பல தடவைகள் சபாநாயகரும் சபையில் தெரிவித்தார்-என்றார். (அ)

# இந்த ஆண்டு இதுவரை 17 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, பெப். 23

2025 ஆம் ஆண்டு இதுவரை 17 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், 5 கத்திக் குத்து சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்கள் அதிக குற்றங்கள் நிகழும் மாகாணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அந்த மாகாணங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் கூறினார்.

நாட்டில் 57 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களும், அவற்றுக்கு சுமார் 1,400 பேர் உதவியாளர்களாக செயற்படுவதாகவும் புலனாய்வுத் தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தகவல் ஊடக அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு நடத்தப்பட்ட விசாரணைகளில், 13, ரி-56 ரக துப்பாக்கிகள், 15 ரிவால்வர்கள், 21 கைத் துப்பாக்கிகள், 75, 12-போர் துப்பாக்கிகள், 7 ரிப்பீட்டர்கள், 805 உள்ளூர் துப்பாக்கிகள் மற்றும் பிற துப்பாக்கிகள் நான்கும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீடன் தரும் பாடம்!

- சுரேந்தர் ரவி

நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சி பல்வேறு துறைகளிலும் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக தொழில்நுட்ப நுணுக்கங்கள் புத்தெழில் பெற்று வருகின்றன. முக்கியமாக, கல்வித் துறையில் தொழில்நுட்பங்களின் அறிமுகம், பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளி முதல் கல்லூரி வரையில் கல்வி கற்பதிலும், கற்பிப்பதிலும் நவீன தொழில்நுட்பங்களின் பங்களிப்பு நாளுக்கு நாள் மேம்பட்டு வருகிறது. நவீன கல்வி முறையானது, மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், ஆசிரியர்களின் பணியையும் எளிமைப்படுத்தியுள்ளது.

கல்வி கற்றலில் புதுமைகளைப் புகுத்த முயன்ற சுவீடன், அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களுக்கு மாற்றாக முற்றிலும் எண்மவழி பாடப்புத்தகங்களையும், இணையவழிக் கற்றலையும் கடந்த 2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

நவீன தொழில்நுட்பங்களின் வாயிலாக மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த முடியும் என்ற தொலைநோக்குடன் இத்திட்டத்தை சுவீடன் நடைமுறைப்படுத்தியது. தொடக்கப்பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கே கையடக்கக் கணினிகள் வழங்கப்பட்டன. கற்றல், வீட்டுப்பாடம், தேர்வுகள் என அனைத்தையும் அக்கணினிகள் மூலமாகவே சிறார்கள் மேற்கொண்டனர். காகிதங்களில் எழுதத் தேவை ஏற்படாத நிலையே சுவீடனின் பள்ளிகளில் காணப்பட்டது. எழுத்து வழித் தேர்வுகளும் கையடக்கக் கணினிகள் மூலமாகவே நடத்தப்பட்டன. கல்வி கற்பித்தலுக்கும் நவீன தொழில்நுட்பங்களையே ஆசிரியர்களும் பயன்படுத்தினர்.

தொடக்கத்தில் இத்திட்டத்துக்குப் பெரும் வரவேற்பு காணப்பட்டது. புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கல்வி கற்பதன் மூலமாக மாணவர்களை




எதிர்காலத்துக்கு ஏற்றவர்களாக மாற்ற முடியும் என்ற சுவீடன் அரசின் முன்முயற்சிக்குப் பெற்றோர் உள்ளிட்டோர் ஆதரவு நல்கினர். ஆனால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு அத்திட்டத்தை சுவீடன் அரசு கைவிட்டுள்ளது.

தற்போது எண்மவழி பாடப்புத்தகங்களுக்கு மாற்றாக, அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களைப் பள்ளிகளில் அந்நாட்டு அரசு மீண்டும் கொண்டுவந்துள்ளது. அதற்கு முக்கியக் காரணம், எண்மவழி கல்வி கற்றலில் மாணவர்களின் கற்றல்திறன் வெகுவாகக் குறைந்துள்ளது என்பதே. முக்கியமாக, எழுத்துத் திறனிலும் பாடப்புத்தகங்களைக் கடந்து மற்ற புத்தகங்களை வாசிப்பதிலும் மாணவர்களின் ஆர்வம் பெருமளவில் குறைந்திருப்பதை சுவீடன் அரசு கண்டறிந்தது. அதையடுத்து, அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள் மாணவர்களின் கைகளில் மீண்டும் தவழத் தொடங்கியுள்ளன.

இணையவழியாகக் கல்வி கற்றலில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. மாணவர்களின் கவனச்சிதறல், சமூக வலைதளங்களின் அதிகரித்த பயன்பாடு, இணையவழி விளையாட்டுகள் மீதான ஆர்வம், மற்ற மாணவர்களுடன் இணக்கமாக இல்லாமல் தனித்திருக்கும் சூழல், தொழில்நுட்பங்களை அதிகமாகச் சார்ந்திருப்பது, பெற்றோர் - ஆசிரியர்களை மதிக்காமல் இருத்தல் உள்ளிட்டவற்றோடு சமுதாயத்துக்கும் பெரும் அச்சுறுத்தல் காணப்படுகிறது.

மேலும், தொழில்நுட்பக் கருவிகளை அதிகமாகப் பயன்படுத்துவதால், மாணவர்களின் கண்பார்வை பாதிக்கப்படுகிறது. விளையாட்டுகளில் ஆர்வம் குறைவதால், உடல் பருமன் அதிகரிப்பு உள்ளிட்ட நோய்களும் ஏற்படுகின்றன் மாணவர்களின் சமூகம் சார்ந்த கண்ணோட்டத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதுடன், அவர்கள் உளவியல் ரீதியாகவும் பாதிப்புகளைச் சந்திக்க வாய்ப்புள்ளது.

அனுபவத்தின் வாயிலாக இதை உணர்ந்துகொண்ட சுவீடன் அரசு, புத்தகங்கள் வழியான பாரம்பரிய கல்வி முறைக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியுள்ளது. அதே வேளையில், எண்மவழி கல்வி கற்றலுக்கு முற்றிலுமாக அந்நாட்டு அரசு தடை விதித்துவிடவில்லை. வழக்கமான கற்றலையும் எண்மவழி கற்றலையும் சரிவிகிதமாக மாணவர்களிடத்தில் கொண்டுசேர்க்கவுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

சுவீடனின் அனுபவத்தில் இருந்து இந்தியா உள்ளிட்ட நாடுகள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். நம் நாட்டில் நவீன தொழில்நுட்பங்கள் வாயிலான கல்வி கற்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் வேளையில், பாரம்பரிய வழியான கற்றலும் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும்.

கல்வி கற்பிப்பதில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டாலும், மாணவர்களை நல்வழிப்படுத்துவதிலும் அவர்களை அறிவுச்செல்வங்களாக விளங்கச் செய்வதிலும் ஆசிரியர்களின் பங்களிப்பு என்றும் குறைந்துவிடக் கூடாது.

நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், கல்வித் துறையில் அதன் சாதக-பாதகங்களை விரிவாக ஆராய்ந்து, மாணவர்களின் உடல் நலமும், மனநலமும், கற்றல் திறனும் பாதிக்காத வகையில் எண்மவழி கற்றல் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். ●

## இந்தவார ராசிபலன் 23.02.2025 - 01.03.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மாசி 11
நல்ல நேரம்: 09.30 - 11.00 ராகு காலம் : 05.00 - 06.30 திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். அவர்கள் அனைவரின் பாராட்டையும் பெற்று மகிழ்வார்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். வீண் அலைச்சல்கள் ஏற்படும்

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவராவர். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். அரசியல்வாதிகள் சிலருக்கு பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவமும் ஏற்படும். உங்களுக்குத் தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். சில அரசியல்வாதிகள் கௌரவம் கூடும். மந்திரி போன்ற பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். எடுத்துக்கொண்ட புதிய திட்டங்களில் தாமதங்கள் தடைகள் ஏற்படலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உங்களுக்குத் தெய்வ சிந்தனைகளால் மனதில் அமைதி நிலவும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். மக்களின் முழு ஆதரவால் தலைவர்கள் வெற்றி பெற்று கொண்டாட்டங்களில் ஈடுபடுவர். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம். சந்ததி விருத்தி ஏற்படலாம். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். வர்க்கு வன்மை ஓங்கி வருமானம் அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர்களுக்குத் தங்கள் உழைப்பின் காரணமாகப் புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் நல்ல பல கருத்துக்களைக் கேட்பதின் மூலமாக உங்களுக்கு ஞானத்தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். உறவு மற்றும் நண்பர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். புதுப்புது முயற்சிகளில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலமாக வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவீர்கள். சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக்கும். உயர்ரக வாகனங்கள் கிடைக்கும் சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். வாக்குவாதத்தால் குடும்பத்தில் பிரச்சனைகளில் எழலாம். வீண் மனஸ்தாபங்களைத் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுபச் செய்திகளை எதிர்பார்க்கலாம். தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும் எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். சிலநேரங்களில் சுறுசுறுப்பற்ற நிலையும், மனோபயமும் நிலவும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். விரிவாக்கங்கள் செய்வதினால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவமும் உண்டாகும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். சிலருக்கு எப்போதும் எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்குக் காரியத்தடைகள், காலதாமதங்கள் ஏற்படும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பயன்களை அடைவீர்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். வியாபாரத்தில் அயராது உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்வுகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். நற்குணங்கள் கொண்ட வேட்பாளர்கள் அனைவரின் பாராட்டையும் பெற்று தங்கள் தொகுதியில் வெற்றி பெறுவர். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உபரி வருமானம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூ.எஸ். எயிட் உதவி இடைநிறுத்தமும் இலங்கையின் இரு ட்ரம்ப் விசிறிகளும்



**வீரகத்தி தனபாலசிங்கம்**

மீண்டும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக கடந்த மாதம் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் தான் தோன்றித்தனமான நடவடிக்கைகளில் இறங்குவார் என்பது எதிர்பார்க்கப்பட்டதே. ஜனவரி 20 ஆம் திகதி பதவியேற்ற மறுகணமே அவர் பிறப்பித்த உத்தரவுகள் தொடக்கம் கடந்த ஒரு மாதகாலமாக அவரது நிருவாகத்தின் நடவடிக்கைகள் சர்வதேச கடப்பாடுகளில் இருந்து விலகுவதே அவரது வெளியுறவுக் கொள்கையின் தீர்க்கமான அம்சமாக இருக்கிறது என்பதை மீண்டும் தெளிவாக நிரூபித்து நிற்கின்றன.

உலக சுகாதார நிறுவனம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் சர்வதேச உடன்படிக்கை ஆகியவற்றில் இருந்து விலகியதை தொடர்ந்து அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகளை இடைநிறுத்துவதற்கும் ட்ரம்ப் நிருவாகம் தீர்மானித்தது.

அமெரிக்காவின் உலகளாவிய உதவிக்கான ஒரு கட்டமைப்பாக ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக செயற்பட்டு வந்திருக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவன நிறுவனம் ' யூ.எஸ். எயிட்" செயற்திறன் அற்றதாகவும் கோட்பாட்டு முரண்பாடுகளை கொண்டிருப்பதாகவும் ஒரு காரணத்தைக் கூறி ட்ரம்ப் நிருவாகம் வெளிநாட்டு உதவிகளை 90 நாட்களுக்கு முடக்கியிருக்கிறது. அந்த நிறுவனத்தை மூடி இராஜாங்கத் திணைக்களத்துடன் இணைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

அமெரிக்க அரசாங்கத்தின் நிறுவனங்கள் அமெரிக்காவின் உலக மேலாதிக்க மற்றும் மூலோபாய நலன்களை பேணிப்பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற போதிலும், உலகம் பூராவும் வாஷிங்டனின் மென் அதிகாரத்தை மேம்படுத்தும் ஒரு முக்கிய கருவி என்று வர்ணிக்கப்பட்டுவந்த யூ.எஸ். எயிட் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் கோடிக்கணக்கான டொலர்கள் உதவிகளை நாடுகளுக்கும் அமைப்புகளுக்கும் வழங்கிவருகிறது. வெளிநாட்டு உதவிகளை முடக்கும் ட்ரம்ப் நிருவாகத்தின் தீர்மானத்தின் விளைவாக உயிர் வாழ்வுக்காக அமெரிக்க உதவியில் தங்கியிருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்படப் போகிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் செயற்திறன் திணைக்களத்தின் தலைவரான உலகின் பெரிய தனவந்தர் எலோன் மஸ்க் யூ.எஸ். எயிட் நிறுவனம் அமெரிக்கவை வெறுக்கும் தீவிரவாத இடது - மார்க்சியவாதிகளினதும் நம்பமுடியாத பயங்கரமான கும்பல்களினதும் கூடாரமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

எந்தவிதமான சான்றையும் முன்வைக்காமல் யூ.எஸ். எயிட்டை ' கிறிமினல் அமைப்பு" என்று என்று வர்ணித்த மஸ்க், 'அந்த நிறுவனம் சாவதற்கான நேரம் வந்து விட்டது" என்றும் கூறினார். அதேவேளை, யூ.எஸ்.எயிட் தீவிரவாத கிறுக்கர்கள் கும்பல் ஒன்றினால் நிருவகிக்கப்பட்டு வந்ததாகவும் அவர்களை தாங்கள் வெளியேற்றிக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி ட்ரம்ப் கூறினார்.

வெளிநாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்கு இதுகாலவரை அமெரிக்க நிருவாகங்கள் கடைப்பிடித்து வந்திருக்கும் கொள்கைகளும் நடைமுறைகளும் பல சந்தர்ப்பங்களில் அமெரிக்காவின் நலன்களுக்கும் விழுமியங்களுக்கும் முரணானவையாக அமைந்திருப்பதாக கருதும் ட்ரம்ப் 'அந்த உதவிகள் வெளிநாடுகளின் சிந்தனைகளை மேம்படுத்துவதற்கும் நாடுகளுக்குள்ளும் நாடுகள் மத்தியிலும் இணக்கப்போக்கான, உறுதிவாய்ந்த உறவுகள் பாதிக்கப்படுவதற்கும் வழிவகுத்திருப்பதாக" கூறுகிறார்.

ட்ரம்ப் நிருவாகத்தின் இந்த தீர்மானங்களை உலக நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் கடுமையாக் கண்டனம் செய்துவருகின்ற அதேவேளை, இலங்கையில் இரு அரசியல்வாதிகள் ஆதரித்து விசித்திரமான கருத்துக்களை வெளியிட்டு ட்ரம்பின் விசிறிகள் போன்று நடந்து கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்சவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்சவுமே அவர்கள்.

இலங்கையில் யூ.எஸ். எயிட்டின் நிதியுதவிகள் குறித்து விசாரணை செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்த நாமல் ராஜபக்ச 'மற்றைய நாடுகளின் விவகாரங்களில் தலையீடு செய்யாத" ட்ரம்பின் கொள்கையை பாராட்டியிருப்பதுடன் அமெரிக்க வரியிறுப்பாளர்களின் நிதி ஒதுக்கீடுகளில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த வாரம் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

வெளிநாடுகளில் அரசாங்கங்களுக்கு எதிராக கிளர்ச்சிகளை தூண்டிவிடும் நடவடிக்கைகளுக்கு யூ.எஸ். எயிட்டின் நிதி பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதாகவும் ட்ரம்ப் கூறியிருப்பது நாமல் ராஜபக்சவை கவர்ந்திருக்கிறது போன்று தெரிகிறது. தங்களது ஆட்சிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாட்டுச் சதி இருந்ததாக கூறும் ராஜபக்சாக்களுக்கு உலகம் வெறுக்கின்ற ட்ரம்ப் ஒரு 'சிறந்த அரசியல்ஞானியாக" தெரியும் விசித்திரம்.

அதேவேளை, அமெரிக்காவை வெறித்தனமாக தாக்கிப் பேசுவதை வழக்கமாகக் கொண்ட விமல் வீரவன்சவும் யூ.எஸ். எயிட் நிறுவனத்தின் 'தவறான செயல்களை" ஜனாதிபதி ட்ரம்ப் அம்பலப்படுத்துவதாகக் கூறி அவரை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார். அவர் எக்ஸ் சமூக ஊடகத்தில் செய்திருக்கும் பதிவொன்றில் 'அமெரிக்க தனவந்தர் ஜோர்ஜ் சோரோஸ் ஊடாக வழங்கப்படும் யூ.எஸ். எயிட் நிதியுதவி இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் தோற்றுவித்த நெருக்கடிகளை அம்பலப்படுத்துகின்றமைக்காக அமெரிக்க ஜனாதிபதிக்கு நன்றி. குழப்ப நிலைகளுக்கு ஆதரவளிக்கின்ற தூதுவர்களையும் அம்பலப்படுத்துமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

டொனால்ட் ட்ரம்பை வெளிநாடுகளின் விவகாரங்களில் தலையீடுகளைச் செய்யாத வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பவராக ராஜபக்சவும் வீரவன்சவும் 'கண்டு பிடித்திருப்பது" தான் இங்கு விசித்திரமான ஒரு விடயமாகும்.

டென்மார்க் நாட்டுக்கு சொந்தமான கிறீன்லாந்து தீவை அமெரிக்காவுக்கு சொந்தமாக்கப் போவதாகவும் மத்திய கிழக்கில் காசா பள்ளத்தாக்கில் இருந்து பாலஸ்தீன மக்களை வெளியேற்றிவிட்டு அந்த பள்ளத்தாக்கை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் போவதாகவும் கனடாவை அமெரிக்காவின் அமெரிக்காவின் 51 வது மாநிலமாக்குவதற்கு விரும்புவதாகவும் ட்ரம்ப் கூறியதை அறிந்த பின்னரும் கூட இந்த இரு இலங்கை அரசியல்வாதிகளும் ட்ரம்பை 'தலையீடு செய்யாத கொள்கைக்காக" பாராட்டுகிறார்கள் என்றால் அதை என்னவென்று சொல்வது?.

ராஜபக்சவும் வீரவன்சவும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மீதான தங்களது வெறுப்பின் காரணமாகவே யூ.எஸ். எயிட் மீதான ட்ரம்ப் நிருவாகத்தின் தாக்குதலை ஆதரிக்கிறார்கள் என்று தெரிகிறது. மூன்று வருடங்களுக்கு முன்னர்

> "தங்களது வீழ்ச்சிக்கு தவறான ஆட்சிமுறையும் ஊழல் முறைகேடுகளுமே உண்மையில் காரணம் என்பதை இந்த அரசியல்வாதிகள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை."

ராஜபக்சாக்களின் ஆட்சியை வீழ்த்திய மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெறும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் செயற்பட்டதாக இவர்கள் ஏற்கெனவே குற்றஞ்சாட்டி வந்திருக்கிறார்கள். பல தொண்டர் நிறுவனங்களுக்கும் சிந்தனைக் குழாம்களுக்கும் எதிரான தங்களது தாக்குதலை மீண்டும் தீவிரப்படுத்துவதற்கு யூ.எஸ். எயிட்டுக்கு எதிராக ட்ரம்ப் நிருவாகம் நடவடிக்கையில் இறங்கியிருக்கும் இன்றைய சந்தர்ப்பத்தை இவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

வீரவன்சவை பொறுத்தவரை, உள்நாட்டுப்போர் காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்த மனிதாபிமான பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் செய்த மனிதாபிமான உதவிகளைக் கூட பயங்கரவாதத்துக்கும் பிரிவினைவாதத்துக்கும் வழங்கப்படும் ஆதரவு என்று விமர்சித்தவர். இராணுவ ரீதியாக அன்றி அரசியல் ரீதியாக தேசிய இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வைக் காணவேண்டும் என்று குரல் கொடுத்த தொண்டர் நிறுவனங்களுக்கு எதிரான விசமத்தனமான பிரசாரங்களின் முன்னரங்கத்தில் வீரவன்ச போன்றவர்கள் நின்றார்கள்.

அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் எதிராக 'போர்க்கொடி" தூக்கிய வர்கள் பெரும்பாலும் இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளில் குறைந்தபட்சமானவற்றைக் கூட ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாதவர்கள். இன்று இத்தகையவர்கள் நிறவெறியையும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான உணர்வுகளையும் கொண்ட ஒரு அமெரிக்க ஜனாதிபதியை பாராட்டுவதில் திருப்தி காண்கிறார்கள்.


அமெரிக்க மக்களின் வரிப்பணம் வெளிநாடுகளில் ஒதுக்கீடு செய்யப்படுவதில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நாமல் ராஜபக்ச தங்களது குடும்பத்தின் ஆட்சிக் காலத்தில் சொந்த நாட்டு மக்களின் வரிப்பணம் செலவிடப்பட்டதில் இருந்த வெளிப்படைத் தன்மையின் இலட்சணத்தை ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இவர்களுக்கும் ட்ரம்புக்கும் இடையே உணர்வுகள் ஒத்துப் போவதற்கு காரணம் 'மற்றவர்கள்" மீதான வெறுப்பேயாகும். குறுகிய மனப்பான்மை என்பது பெரும்பாலும் வெறுப்புணர்வில் இருந்தே வெளிக் கிளம்புகிறது. அமெரிக்காவில் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் குடியேற்றவாசிகளுக்கும் எதிரான வெறித்தனமான உணர்வைக் கொண்ட ஜனாதிபதி ட்ரம்ப்பை, தங்களது அரசியல் மீட்சிக்கு இனவாதத்தில் மாத்திரம் நம்பிக்கை கொண்டிருக்கும் இவர்கள் கோட்பாட்டு அடிப்படையிலான தங்களது நேசசக்தியாக வரித்துக் கொள்வதில் காட்டும் நாட்டம் ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

யூ.எஸ். எயிட் உதவி நிறுத்தம் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை மிகவும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. அத்தகைய நிறுவனங்கள் சகலதுமே வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையாகவும் செயற்படுகின்றன என்று கூறமுடியவிட்டாலும், உண்மையில் சமூகங்களின் நலன்களுக்காக பயனுறுதியுடைய செயற்திட்டங்களை முன்னெடுக்கும் நிறுவனங்கள் பாதிக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளரான கலாநிதி ஜெகான் பெரேரா 'முற்றுகைக்குள்ளாகியிருக்கும் யூ.எஸ். எயிட்டும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பட்டினிக் கொடுமை மற்றும் போர்ச் சூழல்களில் மக்களின் இடர்பாடுகளைத் தணிப்பதில் அமெரிக்க உதவி முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை வகிக்கும் உலகின் பிராந்தியங்களில் பெரும் எண்ணிக்கையான மக்களின் உயிர்வாழ்வு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது என்கின்ற அதேவேளை, யூ.எஸ். எயிட் உதவி நிறுத்தம்

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுகைக்குள் யூ.எஸ். எயிட் நிறுவனமும் அரசாங்க சார்பற்ற தொண்டர் அமைப்புக்களும்



கலாநிதி ஜெகான் பெரேரா

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் (யூ.எஸ். எயிட) ஊடாக வழங்கப்படும் அமெரிக்க அரசாங்கத்தின் பல கோடி டொலர்கள் வெளிநாட்டு உதவித் திட்டம் இரவோடிரவாக இடைநிறுத்தப்பட்டமை அமெரிக்காவிலும் அந்த உதவி முக்கியமாக இருக்கின்ற உலகின் ஏனைய பாகங்களாலும் தலைப்புச் செய்திகளை ஆக்கிரமித்தது. யூ.எஸ். எயிட்டின் செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டதால் அமெரிக்காவிலும் கூட உதவித் துறையில் முன்னறிவித்தல் இன்றி பெரும் எண்ணிக்கையானோர் தொழில்வாய்ப்புக்களை இழப்பதற்கு வழிவகுத்திருக்கிறது.

பட்டினி அல்லது போர்ச் சூழ்நிலைகளில் மக்களின் இடர்பாடுகளை தணிப்பது போன்று அமெரிக்க உதவி முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை வகிக்கின்ற உலகின் பாகங்களில் நிராதரவான பெரும் எண்ணிக்கையான மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை அமெரிக்க அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், இலங்கையில் அமெரிக்க உதவி இடைநிறுத்தம் முற்றிலும் வேறுபட்ட காரணத்துக்காக தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்திருக்கிறது.

வெளிநாட்டு உதவி செயற்திட்டம் இடைநிறுத்தம் செய்யப்பட்டதற்கு பல்வேறு காரணங்களை அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிரான முறையில் வெளிநாட்டு உதவி செயற்திட்டம் செயற்திறன் இல்லாமல் கையாளப்படுவதாகவும் அமெரிக்க நலன்களுக்கு உதவுவதாக இல்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதைப் பயன்படுத்தி இலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் குறிப்பாக முன்னைய அரசாங்கங்களில் முன்னணிப் பாத்திரத்தை வகித்தவர்கள் மக்களின் கவனத்தை திசைதிருப்பும் காரியங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால் அவ்வாறு கவனத்தை திருப்ப வேண்டிய நிர்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த முன்னாள் அரசாங்க தலைவர்கள் தங்களின் தவறான ஆட்சிமுறை மற்றும் ஊழல் முறைகேடுகள் காரணமாகவன்றி , யூ.எஸ். எயிட் நிறுவனத்தின் நிதியுதவியைப் பெறும் அரசாங்க சார்பற்ற தொண்டர் அமைப்புக்களின் சதிவேலைகளின் விளைவாகவே தாங்கள் அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்டதாக கூறுகிறார்கள்.

2022 ஆம் ஆண்டின் முன் மாதங்களில் அன்றைய அரசாங்கத்தை பதவியில் இருந்து வெளியேறுமாறு கோரிக்கை விடுத்து நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த இலட்சக் கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். பொதுமக்கள் எதிர்நோக்கிய முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார இடர்பாடுகளின் விளைவாக அறகலய ஆர்ப்பாட்டங்கள் தடுத்து நிறுத்த முடியாத ஒரு பேரியக்கமாக மாறியது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அரசாங்கத்தில் இருந்தவர்கள் நாட்டின் செல்வத்தை களவாடிவிட்டார்கள் என்று நம்பினார்கள். எரிபொருள், உணவு வகைகள் மற்றும் மருந்துகள் உட்பட அத்தியாவசிய இறக்குமதிகளை செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணி (டொலர்கள்) இல்லாத அளவுக்கு நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. எரிபொருட்களைப் பெறுவதற்கு நீண்ட வரிசைகளில் கால்கடுக்க காத்துநின்று களைத்துப்போய் பலர் இறந்தார்கள். வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் இல்லாத நிலையில் மேலும் பலர் இறந்தார்கள்.

தற்போது விசாரணைகளுக்கு உள்ளாகியிருக்கும் முன்னாள் அரசாங்க தலைவர்கள் சிலர் இலங்கைக்கு யூ.எஸ். எயிட் நிறுவனம் வழங்கிய நிதியுதவிகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் செயலகத்திடம் அந்த பொறுப்பை ஒப்படைத்ததன் மூலம் அந்த விசாரணைக் கோரிக்கைகளுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதிலளித்திருக்கிறது.

அரச நிறுவனமான இந்த அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் செயலகம் தான் அதில் பதிவு செய்யப்பட்ட அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு எங்கிருந்து நிதியுதவிகள் கிடைக்கின்றன, எவ்வளவு நிதியுதவி கிடைக்கிறது, அந்த நிதியைப் பயன்படுத்தி மக்களின் மேம்பாட்டுக்காக அவை எத்தகைய திட்டங்களை முன்னெடுக்கின்றன என்ற விபரங்களை திரட்டும் பணிக்கு பொறுப்பாக இருக்கிறது. இலங்கையில் யூ.எஸ். எயிட் நிதியுதவி தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஆராயப்போவதாகவும் அதற்காக தனது அமைச்சின் கீழ் இயங்கும் அரசாங்க சார்ர்பற்ற தொண்டர் நிறுவனங்கள் செயலகத்திடமிருந்து அறிக்கை ஒன்றைக் கேட்டிருப்பதாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கூறியிருக்கிறார்.




யூ.எஸ். எயிட் உட்பட இலங்கையில் செயற்படும் பெரும்பாலான உதவி வழங்கும் நிறுவனங்கள் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு நிதியைப் பகிரும்போது கடுங்கண்டிப்பான செயன்முறைகளை பின்பற்றுகின்றன. வழமையாக, உதவி வழங்கும் நிறுவனங்கள் அவற்றுக்கு அக்கறையுள்ள துறைகளை விசேடப்படுத்தி யோசனைகளை சமர்ப்பிக்குமாறு அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைக் கோருகின்றன. நிதியுதவியைப் பயன்படுத்தி செய்யப் போகின்றவற்றைப் பற்றியும் அவற்றினால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றியும் கணிசமான விபரங்களை சமர்ப்பித்து அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் நிதியைப் பெறுவதற்கு போட்டிபோட வேண்டியிருக்கிறது. நன்கொடை கிடைக்கப்பெற்றதும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அவை முன்னெடுக்கின்ற பணிகள் குறித்து கிரமமாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வழங்கப்படுகின்ற நிதியுதவி தொடர்பில் கிரமமாக வருடாந்தம் அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கணக்காய்வு நிறுவனங்கள் மூலமாக, (சர்வதேச புகழ்பெற்ற கணக்காய்வு நிறுவனங்கள் விரும்பத்தக்கது) கணக்காய்வு செய்யப்படவேண்டும் என்று இந்த உதவி வழங்கும் நிறுவனங்கள் வலியுறுத்துகின்றன. தாங்கள் ஆதரவளிக்கின்ற செயற்திட்டங்களின் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் சுயாதீனமான வெளி கண்காணிப்பாளர்களையும் அனுப்பக்கூடும்.

பொதுமக்களைக் கவராத ஆனால், அதேவேளை சகல பிரிவினரையும் அரவணைக்கும் நீதியான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு அவசியமான கஷ்டமான செயற்திட்டங்களை பெரும்பாலும் முன்னெடுப்பதே அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பணிகளின் பெறுமதியாகும். ஆங்கில தத்துவஞானி ஜோன் றஸ்கினின் எழுத்துக்கள் தந்த ஊக்கத்தினாலேயே, இந்தியாவில் மகாத்மா காந்தி சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்தார். சமுதாயம் ஒன்று அதன் கடைசி உறுப்பினரின் நலன்களையும் உறுதிசெய்வதில் அக்கறை காட்டுவதாக இருந்தால் மாத்திரமே அது நல்ல சமுதாயமாக இருக்கும் என்று 1860 ஆம் ஆண்டில் றஸ்கின் எழுதினார்.

சிறுவர்கள் பராமரிப்பு, சுகாதாரம், அபிவிருத்தி அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்று எந்த துறையாக இருந்தாலும் சமூகத்தின் பாதுகாப்பில் இருந்து எந்த ஒருவரையும் ஒதுக்காமல் சகலரையும் அரவணைப்பதற்காக பாடுபடுவதே (இதில் அரசாங்கம் முக்கிய பாத்திரத்தை வகிக்கிறது) அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பலவற்றின இலட்சியமாகும்.

யூ.எஸ். எயிட் வழங்கிய நிதியுதவிகளையும் அவற்றைப் பெற்ற அமைப்புக்களையும் விசாரணை செய்யவேண்டும் என்று இப்போது கோருகின்றவர்கள் அத்தகைய நிதியுதவிகளை யூ.எஸ். எயிட் வழங்கியபோது அரசாங்கத்தில் இருந்தவர்களே. அப்போது அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தேசிய செயலகம் இயங்கிக் கொண்டிருந்தது. அது அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் அதன் பணியைச் செய்து கொண்டிருந்தது.

வழங்கப்படுகின்ற நிதியுதவிகள் பக்கச்சார்பான அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கடுமை வாய்ந்த கொள்கைகளை யூ.எஸ். எயிட் போன்ற நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன. அதன் காரணத்தினால்தான் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அவற்றின் நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைக்கும்போது அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் சேர்ந்தவர்களை அழைப்பதை உறுதி செய்துகொள்கின்றன. தங்களது பணிகள் அரசியல் ரீதியில் குறுகிய நோக்குடன் பக்கச்சார்பானவையாக நோக்கப்படக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு செய்யப்படுகிறது.

தற்போதைய நிலைவரம் இலங்கையிலும் உகளாவிய ரீதியிலும் அரசாங்க சார்பற்ற தொணடர் நிறுவனங்களுக்கு மிகவும் நெருக்கடிமிக்கதாக இருக்கிறது. இதுகாலவரையில் நிதியுதவிகளைச் செய்த சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களில் யூ.எஸ். எயிட் தான் மிகவும் பெரியதாக விளங்கி வந்திருக்கிறது. அதனால், யூ.எஸ். எயிட்டின் நிதியுதவி திடீரென்று இடைநிறுத்தப்படுவதன் விளைவாக பல அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அவற்றின் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கவும் அவற்றின் பணிகளை நிறுத்தவும் வேண்டியிருக்கிறது. சில அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மூடப்பட்டும் விட்டன.

சர்வதேச உலக ஒழுங்கு பெருமளவுக்கு வெளிப்படையாக சுயநலனை அடிப்படையாக, அதாவது உலகளாவிய நலன்களுக்கு மேலாக தேசிய நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றதாகவும் பொதுவில் மக்களின் நலன்களுக்கு மேலாக சமுதாயத்தின் செல்வச் செழிப்புடைய பிரிவினரின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றதாகவும் மாறி வருகின்றது போன்று தோன்றுகிறது.

இது மனித குலத்துக்கோ அல்லது மனித நாகரிகத்துக்கோ ஆரோக்கியமான நிலைவரம் அல்ல. மற்றவர்களின் அதாவது அயலவர்களினதும் உயிர் வாழும் சகல பிறவிகளினதும் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றே உலகின் மதங்களைப் படைத்தவர்கள் போதித்தார்கள்.

சர்வதேச முறைமையில் சர்வஜன உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தாராளாத சிந்தனைகள் ஆதிக்கம் செலுத்தியபோது 1968 ஆம் ஆண்டில் கூர்ப்பியல் விஞ்ஞானியான காறெட் ஹார்டின் "துன்பியல்" என்று ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதினார். அளவுக்கு அதிகமான சனத்தொகையின் பாதக விளைவுகளை விளக்கிக் கூறுவதற்கு உதாரணமாக அவர் ஆடுகளின் மேய்ச்சல் தரையை அவர் உதாரணமாக பயன்படுத்தினார்.

தனிநபர்கள் தங்களது சுயநலத்துக்காக செயற்பட்டு, (மேய்ச்சல்தரை அல்லது மீன்வளம் போன்ற) பொதுவான வளங்களை மிகையாகச் சுரண்டும்போது அவை வெறுமையாகி சகலருக்கும் பாதகமான முறையில் நீண்டகாலத்தில் இறுதியில் அழிந்துபோகின்றன. பொதுவான வளங்களை ஒழுங்கு கட்டுப்பாடின்றி பயன்படுத்தும் சுதந்திரம் இறுதியால் அவை ஒருவருக்குமே கிட்டாமல் பாழ்பட்டுப் போய்விடக் கூடிய நிலைமை உருவாகலாம். உலகம் இன்று அந்த திசையிலேயே சென்று கொண்டிருக்கிறது போன்று தெரிகிறது. இத்தகைய சூழ்நிலையில், சகலரினதும் நல்வாழ்வுக்காக பாடுபடுகிறவர்களின் பணிகளை மலின்படுத்துவது அல்ல, வலுப்படுத்துவதே அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசின் எதிர்காலம் நீதிமன்றத் தீர்ப்பில்! வடக்கின் எதிர்காலம் இந்தியாவா? சீனாவா?


பனங்காட்டான்

தனி மனிதர், பொதுச்சேவையாளர், சமூக அமைப்பு, பாடசாலை, அரசியல் கட்சி என்று எதனை எடுத்தாலும் அவற்றின் ஒவ்வொரு காலகட்டமும் வரலாற்றுப் பதிவுக்கானது. 25வது ஆண்டில் வெள்ளிவிழா, 50ல் பொன்விழா, 75ல் வைரவிழா பின்னர் நூற்றாண்டு விழா என்று இவைகளுக்கு தனித்தனியான பெயர் உண்டு.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இது 75வது ஆண்டு. தமிழர் தாயகமான இலங்கையின் வடக்கு கிழக்கிலுள்ள மூலைமுடுக்கெங்கும் இதற்கான விழாக்கள் நடைபெற்று கட்சியை எழுச்சியடையச் செய்ய வேண்டிய காலம்.

கவனிப்பாரற்ற ஒரு கோவிலின் மூலஸ்தானத்தில் விளக்கொன்று நூர்ந்து நூர்ந்து எரிவதைப்போல தமிழரசுக் கட்சி தனது சொந்த மண்ணில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. 1974ம் ஆண்டில் இதன் வெள்ளிவிழா மலர் வெளிவந்த பின்னர் இன்னொரு கால வரலாற்றின் அறிகுறியான மலரை பார்க்க முடியவில்லை. கட்சியின் தலைவர், செயலாளர் பதவிகள் என்று பார்த்தால் நிரந்தரமாக ஒருவர் அப்பதவியில் இல்லை. எல்லாமே 'பதில்'கள். இப்போது பதிலுக்கும் பதில் வருகிறது.

கட்சியின் வைரவிழா ஆண்டில் அது நொடிந்து நொந்துபோய் காணப்படுகிறது. இதற்கு ஒத்தடம் கொடுத்து நிமிர்த்திவிட வேண்டியவர்கள் பதவிகளின் பின்னால் பதுங்கிக் காணப்படுகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த வாரம்வரை கட்சியின் பதில்



செயலாளராகவிருந்தவர் திடீரென நோயைக் காரணம் கூறி பதவி விலக, இன்னொருவர் புதிய பதில் செயலாளராக வந்துள்ளார். இவர் கடந்த தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட எம்.ஏ. சுமந்திரன்.

முன்னர் பதில் செயலாளராகவிருந்தவர் மருத்துவர் சத்தியலிங்கம். சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கட்சியின் முக்கியமான கூட்டத்தின் போதும் இவர் தனது நோயைக் காரணம் காட்டி ஒதுங்கியவர். இப்போது நோயைக் காரணம் காட்டி பதில் பதவியிலிருந்தே விலகி விட்டார். நிரந்தரச் செயலாளர் ஒருவர் கட்சிக்கு எப்போதுதான் கிடைப்பாரோ என்ற நிலையில் அனைவரும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

2010இல் தேசியப் பட்டியல் எம்.பியாக கட்சிக்குள் நுழைந்து 2015லும் 2020லும் தேர்தலூடாக எம்.பியாகி கடந்த வருட பொதுத்தேர்தலில் தோல்வி கண்டவர் சுமந்திரன். 2020 தேர்தலில் சிறீதரனின் நட்பினால் அருந்தப்பில் எம்.பியான இவர் கடந்த வருடத் தேர்தலில் சிறீதரனைக் கவிழ்ப்பதற்கு எத்தனித்து தானே கவிழ்ந்தவர்.

இதன் பின்னர் கட்சியின் தலைவராக சிறீதரனை எதிர்த்துப் போட்டியிட்டு அதிலும் தோல்வி கண்டவர். இத்தோடு இவர் விடவில்லை. கட்சியின் செயலாளர் பதவியைத் தருமாறு புதிய தலைவர் சிறீதரனிடம் கேட்டு மறுக்கப்பட்டதையடுத்து அமைதியடையவில்லை. கட்சி யின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தின் பக்கச் சார்பு அனுசரணையால் கட்சியின் பேச்சாளரானார். இப்போது சத்தியலிங்கத்தின் கருணையால் பதில் செயலாளராகியுள்ளார்.

சரியான வேளை வரும்போது சத்தியலிங்கம் பதில் செயலாளர் பதவியிலிருந்து விலகி சுமந்திரனை அப்பதவிக்கு அமர்த்துவார் என்கின்ற கருத்தை பல அரசியல் விமர்சகர்கள், ஆய்வாளர்கள், கட்டுரையாளர்கள் (இந்தப் பத்தியாளர் உட்பட) கடந்த சில வாரங்களாக சுட்டி வந்தமை உண்மையாகியுள்ளது. விரைவில் நடக்கவிருக்கும் தேர்தல்களின் போது அபேட்சகர்களை நியமிப்பது


> வடக்கிலிருந்து முதன்முதலாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஐந்து தமிழர்கள் சிங்கள தேசிய கட்சியில் தெரிவாகியுள்ளனர். சீன அமைச்சர் ஒருவர் இந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கிறார். இந்தச் சமயத்தில் வடக்கு மாகாண மக்களுக்கு நாமே நிரந்தரமானவர்கள் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதுவர் கூறியிருப்பதன் அர்த்தம் என்ன?

உட்பட அனைத்திலும் செயலாளரே ஒப்பமிடும் உரிமையைப் பெற்றவராதலால், இவ்வேளையில் சுமந்திரன் அப்பதவியில் இருந்தால் மட்டுமே அவருக்கு விருப்பமானவர்கள் அபேட்சகர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பதே இந்தத் திட்டமிடலின் பின்னணி.

அடிக்கடி நோய்வாய்ப்படும் மருத்துவர் சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் கைவிடாது வைத்திருப்பது ஏன் என்ற கேள்வி அண்மையில் ஓர் ஊடகத்தில் எழுப்பப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியால் மாதாந்தப் படி, அமர்வுகளால் கிடைக்கும் சிறப்புப் படி, சலுகை அடிப்படை உணவு மற்றும் பல மேலதிக வசதிகள் இந்தப் பதவியால் கிடைக்கும் வரை தமது நோயை கட்டுக்குள் வைத்திருக்க முடியுமென மருத்துவர் நினைக்கிறார் போல் தெரிகிறது.

என்றாவது ஒரு நாள் சுமந்திரன் நாடாளுமன்றம் செல்ல விரும்பும்போது சத்தியலிங்கம் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தியாகம் செய்து அவருக்கு இடம்கொடுப்பார் எனவும் கட்சிக்குள் பேசப்படுகிறது.

எதுவானாலும் கட்சியின் எதிர்காலம்



என்பது இப்போது நீதிமன்றத் தீர்ப்பில் தங்கியிருக்கிறது. ஜூன் மாதத்தில் வழக்கொன்றின் தீர்ப்பு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. என்றாவது வரும் இந்தத் தீர்ப்பு சிறீதரன் தரப்பு கேட்டிருக்கும் விருப்புக்கு சாதகமாக அமையுமாயின் நிர்வாகிகள் தெரிவுக்கு முன்னராக, கட்சியின் மூலக்கிளைகளிலிருந்து மத்திய குழுவரைக்கும் தேர்தல் நடத்தினால் அது சிறீதரன் தரப்புக்கு சாதகமாக அமையுமென்ற அச்சம் அவரை எதிர்ப்பவர்களுக்கு இருக்கிறது. சிலவேளை இவைகளை முடிப்பதற்குள் அடுத்த பொதுத்தேர்தல் வந்தாலும் வந்துவிடும்.

தமிழர்களின் தனித்துவமான அரசியல் தலைமை இப்போது சுமந்திரன் - சிறீதரன் என்ற இருவரின் போட்டிக்குள் நசிபட்டுக் கொண்டிருக்கையில், தமிழரின் அரசியலைத் தீர்மானிக்கும் பொறுப்பை வடக்கிலும் கிழக்கிலும் கணிசமான ஆசனங்களைப் பெற்றிருக்கும் அநுர குமார கட்சி தனதாக்கியுள்ளது. இது போதாதென்று வடமாகாணம் இப்போது எந்த நாட்டுக்கு சொந்த மாகிறது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

"வடக்கு மாகாண மக்களுக்கு நாமே நிரந்தரமானவர்கள்" என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்தமை, ஈழநாடு பத்திரிகையின் வெள்ளிக்கிழமை இதழின் முதற்பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வந்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகவியலாளர்களுடன் நட்பு ரீதியாக நடத்திய சந்திப்பின்போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். தமது கருத்துக்குச் சான்றாக யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு வெளிநாட்டுத் தூதரகம் இந்தியாவுடையது மட்டுமே என்றும், ஐம்பதாயிரம் வீட்டுத் திட்டம் உட்பட பல காரியங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

சீனாவின் நல்லிணக்கம் மற்றும் இன விவகாரங்களுக்கான அமைச்சர் பான் யு தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று இந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வரவிருக்கும் வேளையில் இந்தியத் துணைத்தூதுவர் தமது கருத்தை வெளியிட்டிருப்பதை இங்கு கவனிக்கவேண்டும்.

ஏற்கனவே பல தடவை கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் தமது அதிகாரிகள் சகிதம் வடக்குக்கும் கிழக்குக்கும் காரணம் கூறாத பல விஜயங்களை மேற்கொண்டிருந்தார். காங்கேசன்துறை மற்றும் மன்னார் கடற்கரைகளில் நின்று தூரநோக்கிக் கண்ணாடியால் பார்வையிட்டவாறு, இந்தியா எவ்வளவு தூரத்தில் உள்ளது, இராமர் பாலம் எவ்வாறு உள்ளது என்று பல விடயங்களை வெளிப்படுத்தியது ஞாபகம் இருக்கலாம். அதுமட்டுமன்றி கடலோர மக்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கியதையும், பல இடங்களில் கடலட்டை பண்ணைகளை உருவாக்க உதவியதையும் இந்தியா கவனிக்காது இருந்திருக்க முடியாது. இந்தப் பின்னணியில் பார்க்கையில் வடமாகாணத்தை சீனா தனது பொருளாதார அபிவிருத்தி உதவிகளூடாக தன்வயப்படுத்தி விடலாமென்னும் அச்சம் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்க இடமுண்டு.

இவ்விடயம் தொடர்பாக ஓய்வு பெற்ற தமிழ் அரசியல்வாதி ஒருவருடனும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த ஒருவருடனும் உரையாடியபோது இருவரது கருத்துகளும் ஒரே பார்வையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது. அவற்றின் தொகுப்பாக பின்வரும் கருத்துகளை பார்க்கலாம்:

"வடமாகாணம் தனி ராஜ்ஜியமோ தனிநாடோ அல்ல. இங்கு மக்களால் தெரிவான மாகாண சபையும் இல்லை. தமிழ்த் தேசிய நோக்கம் கொண்ட கட்சிகள் பொதுத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளன. வடக்கை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அநுர குமார கட்சி முனைந்து கொண்டிருக்கிறது. இவர்களினூடாக வடக்கில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த அரசாங்கம் விரும்புகிறது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் பொருளாதார விருத்தி போன்றவைகளில் இந்தியா நேர்மையாக எதனைச் செய்தது? 1983 இனவழிப்பின் பின்னர் பாதிக்கப்பட்ட தமிழரை அவர்கள் தாயகத்துக்கு அனுப்புவதற்கு கப்பல்களை அனுப்பிய இந்திரா காந்தி, தமது பிரதிநிதியாக நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பியதைத் தவிர வேறு எதனை செய்ய முடிந்தது?

1987ல் ராஜீவும் ஜே.ஆரும் இனப்பிரச்சனை தீர்வுக்கென செய்த ஒப்பந்தத்தில் எந்த அம்சம் இதுவரை முழுமையாக நிறைவேற்றப்பட்டது. தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் இந்தியா எப்பொழுதும் அக்கறையாக உள்ளது என்று இந்திய அமைச்சர்களும் ராஜதந்திரிகளும் கூறுவார்களே தவிர, எதனை நிறைவேற்றினார்கள்? 13ஆம் திருத்தம், மாகாண சபை, காவல் - காணி அதிகாரம் என்பவையெல்லாம் பேச்சுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. சிறிது காலம் இயங்கிய வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சராக தங்களால் நியமிக்கப்பட்டவரையே இந்தியா தூக்கியெறிந்துவிட்டது. இவ்வாறு இந்தியா செய்யத் தவறியவைகளை நீண்ட பட்டியலிட முடியும்" என்று மேற்சொன்ன இரு பிரமுகர்களும் தங்கள் பக்கக் கருத்துகளை வெளியிட்டனர்.

சீனாவுக்கு வடமாகாணத்தைப் பிடிக்கும் எண்ணமில்லை. புவியியல் பரப்பும் அதற்குச் சாதகமாக இல்லை. ஆனால், தனது பங்களிப்பினால் சீனா தமிழர் மனதில் நம்பிக்கையான இடத்தைப் பெற்றுவிடுமென்ற அச்சம் இந்தியாவுக்கு உள்ளது.


இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியும் அவரது கட்சியும் மாக்ஸிஸ கொள்கையாளர்கள் என்பதால் நிகழ்காலத்தில் சீனாவின் கால்பதிப்பு ஆழமாகவும், வேகமாகவும் இருக்கலாமென கருதும் இந்தியா, வடமாகாணத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென விரும்புவதையா துணைத் தூதுவர் சாய் முரளியின் கருத்து வெளிப்படுத்துகிறது?

**குறிப்பு** - இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசத்தை தங்கள் நாட்டின் ஒரு பகுதியென பிரகடனப்படுத்தியுள்ள சீனா, அப்பிரதேச மக்களுக்கு வேண்டிய அனைத்தையும் வழங்கி வருவதோடு அவர்கள் சீனாவுக்கு சென்றுவர விசா நடைமுறையை ரத்துச் செய்திருப்பதை தடுக்க முடியாது பார்த்துக் கொண்டிருக்கும் இந்திய அரசு, இலங்கையின் வட பகுதியை - அது தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்டிருப்பதால் இவர்களுக்கு தாங்கள் மட்டுமே நிரந்தரமானவர்கள் என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் உள்ளவரை நின்றுவாழும் பேரறிஞர் அமுதுப் புலவர்

- எஸ். தி. - கனடா



**அமுதுப் புலவரின் பதினைந்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

ஈழத்துத் தமிழ் பேரறிஞர்கள் வரிசையில் அமுதுப் புலவர் அவர்களுக்கு என்றுமே அழியாப் புகழுண்டு. பத்தொன்பதாவது வயதில் தராதரம் பெற்ற ஆசிரியராக காலடி எடுத்துவைத்த இவரது இயற்பெயர் தம்பிமுத்து அமுதசாகரன் அடைக்கலமுத்து. யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலும் பேராதனை பல்கலைக்கழகத்திலும் படித்து பட்டம் பெற்று சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகப் பணியாற்றியபின் அதிபராகி ஓய்வு பெற்றவர். எனினும் வாசிப்புக்கும் எழுத்துக்கும் ஓய்வு கொடுக்காது இப் பூவுலகை விட்டு நீங்கும்வரை தமது படைப்புகளை நூலாக்கி தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கிய பெருந்தகை இவர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் காவியப் பாடசாலையும் யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலையும் இவருக்கு பட்டம் தீட்டிய கல்விக்கூடங்கள். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவ சிரோமணி ந. சுப்பையாபிள்ளை, வித்துவான் வேந்தனார், புலவர் இளமுருகனார், வித்துவான் கே. கே. நடராஜா ஆகியோரிடமும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் செல்வநாயகம், வித்தியானந்தன், சதாசிவம், கணபதிப்பிள்ளை ஆகியோரிடமும் தமிழை முறையாகக் கற்ற ஆசிரியப் பெருந்தகை அமுதுப் புலவர்.

இவரது காந்தப் பேச்சும் கருணையான பார்வையும், ஆற்றல்மிகு எழுத்து வன்மையும் தம்மிடம் கற்காதவர்களையும் அமுது மாஸ்டர் என்று ஆகர்சிக்கும் சக்தியை இவருக்கு பெற்றுக் கொடுத்தது. கடுமையான போக்குக்கொண்டவர்களும் இவரது இயல்பினால் மனமாற்றம் பெற்றுள்ளனர் என்பதுவே இவரது பலமாகும். இவரது கல்விப்பணி, நிர்வாகத்திறன், முகாமைத்துவ அறிவு ஆகியவை சமூகத்தில் உயர்வுக்கு இட்டுச் சென்றன. இதனால் கிடைத்த தலைமைத்துவத்தை ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தாததால் சமூகத்தின் பெருமைக்குரியவராக மதிக்கப்பட்டார்.

தமிழ்ச் சமூகத்தினது உயர்ச்சிக்கும் கத்தோலிக்க பாரம்பரியத்தின் வளர்ச்சிக்கும் அளப்பரிய பங்காற்றிய இவரது சேவைக்காக 2002ஆம் ஆண்டில் அப்போது பாப்பரசராகவிருந்த இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இவருக்கு 'செவாலியே' விருது வழங்கி சிறப்புச் செய்தார். இதனால் உலகளாவிய முழுத்தமிழினமும் பெருமைகொண்டது. இந்த உயரிய விருதினைப் பெற்ற முதலாவது ஈழத் தமிழராக இன்றும் இவர் மதிக்கப்படுகிறார்.

தமது பதினோராவது வயதில் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்த இவர், குறிப்பிட்ட காலகட்டத்தில் ஆசிரியப் பணிக்கும் அப்பால் பல பத்திரிகைகளில் செய்தியாளராகவும் சிறப்புக் கட்டுரையாளராகவும் திகழ்ந்தார். 1980களின் நடுப்பகுதியில் இவரது இன உணர்ச்சி நிரம்பிய பல கவிதைகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'முரசொலி' தினசரியிலும் வாரமலரிலும் தொடர்ச்சியாக வெளிவந்தன. அமுது என்ற புனைபெயரில் எழுதப்பட்ட இக்கவிதைகள் அவ்வேளையில் தமிழரது விடுதலைப் போராட்டத்துக்கு உந்துசக்தியாக விளங்கியவை.

நெஞ்சே நினை, அமுதுவின் கவிதைகள், இவ்வழி சென்ற இனிய மனிதன், காக்கும் கரங்கள், அன்பின் கங்கை அன்னை தெரேசா, மடுமாதா காவியம், புனித அன்னம்மாள் ஆலய வரலாறு ஆகிய நூல்களை எழுதி வெளியிட்ட இவரது 'இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்' என்னும் நூல் இவரது வரலாற்றில் முக்கிய காலகட்டத்தை எடுத்தியம்புவதாக அமைந்தது. 2010 ஆம் ஆண்டில் 240 பக்கங்களில் வெளியான 'இளவாலை தமிழ்க் கங்கை அமுது ஐயாவின் அற்புத படைப்புகள்' நூல் காலத்தால் அழியாத பொக்கிஷம்.

யாழ்ப்பாணம் ஆயராகவிருந்த ஆண்டகை பி. தியோகுப்பிள்ளையா 1975இல் 'சொல்லின் செல்வர்' என்ற சிறப்புப் பட்டத்தை இவருக்கு வழங்கினார். புலவர் மணி, தமிழ்க் கங்கை, மதுரகவி, முப்பணி வேந்தன், செந்தமிழ்த் தென்றல், பாவேந்தன், புலவர்கோன் உட்பட பல சிறப்புப் பட்டங்கள் இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளில் இயங்கும் பொது அமைப்புகளாலும் கல்விக்கூடங்களினாலும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2007ஆம் ஆண்டில் தனது வருடாந்த பட்டமளிப்பு விழாவின்போது கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி சிறப்புச் செய்தது. இலங்கை அரசின் கலாசார அமைச்சு இவருக்கு கலாபூஷணம் விருதும் வழங்கியது.


1959ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கல்வியில் பெற்ற திறமையால் டிப்ளோமாவும் வித்துவான் பட்டமும் பெற்ற இவர், வடஇலங்கை பண்டித, பாலபண்டித வகுப்புகளின் விரிவுரையாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

தாயகத்தின் வடக்கேயுள்ள நெடுந்தீவைப் பிறந்தகமாகக் கொண்ட அமுதுப் புலவர் ஆசிரியர்களையும் பல கல்விமான்களையும்கொண்ட குடும்பத்தின் ஓர் அங்கத்தவர். இளவாலையைச் சேர்ந்த சமய ஈடுபாடு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவரான ஆசிரியை திரேசம்மா சுவாம்பிள்ளையைத் திருமணம் செய்தார். இவரது பத்துப் பிள்ளைகளில் ஒருவர் கனடாவில் பெரும் பணிகள் புரிந்து வரும் வணக்கத்துக்குரிய பேராசிரியர் யோசெப் சந்திர காந்தன் அடிகள்.

கல்வி, பண்பு, ஒழுக்கம், சேவை, இன உணர்வு ஆகிய அனைத்திலும் முன்னணியில் திகழ்ந்தவரான ச. அ. அடைக்கலமுத்துவுக்கு (அமுதுப் புலவர்) கனடா 'தமிழர் தகவல்' வாழ்நாள் சேவை மதிப்பு விருது வழங்கி, தங்கப்பதக்கமும் சூட்டி மதிப்பளித்தது. இவ்விழாவுக்கு நேரில் சமூகமளித்து விருதினைப் பெற்றுக் கொண்ட அமுதுப்புலவர் அவர்கள் வழங்கிய ஏற்புரை பல்சுவை மிகுந்ததாக அமைந்து அவையோரின் பாராட்டைப் பெற்றது மறக்க முடியாதது.

# பல்வேறு துறைகளில் ஈடுபாட்டுக்கு மத்தியில், தமிழ்ப் பத்திரிகை உலகிலும் தனக்கென்று தனித்துவத்தைக் கொண்ட எஸ்.பி.சாமி ஐயா

- வீரகத்தி தனபாலசிங்கம்



தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தில் நான் நெருக்கமாக பணியாற்றிய இருவருக்கு ஒரு பத்துநாள் இடைவெளியில் அஞ்சலிக் குறிப்புக்களை எழுத வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலை எனக்கு.

பெப்ரவரி 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் காலமான முன்னாள் ஞாயிறு தினக்குரல் ஆசிரியரும் நெருங்கிய நண்பனுமான பாரதி இராஜநாயகத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டு விட்டு கொழும்பு திரும்பி இரு நாட்கள் கடந்து போவதற்கு இடையில் கடந்த புதன்கிழமை (பெப்ரவரி 19) தினக்குரல் தாபகர் எஸ்.பி. சாமி அவர்கள் அதே திருநெல்வேலியில் காலமான துயரமிகு செய்தி வந்து சேர்ந்தது. அவருக்கு இறுதி மரியாதை செலுத்தவும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு வழியனுப்பவும் மீண்டும் யாழ்ப்பாணம் பயணமாகிறோம்.

செல்லையா பொன்னுச்சாமி என்பது அவரது முழுப் பெயர். ஆனால், எஸ்.பி. சாமி என்றுதான் நாடும் சமூகமும் அவரை அறிந்து வைத்திருக்கிறது. எனக்கும் அவருக்கும் இடையிலான ஊடாட்டத்துக்கும் தினக்குரலுக்கும் ஒரே வயது. வடக்கிலும் தலைநகர் கொழும்பிலும் பிரபலமான ஒரு வர்த்தகப் பிரமுகர் என்ற வகையில் சாமி அவர்களை நான் ஏற்கெனவே அறிந்து வைத்திருந்த போதிலும், தினக்குரலை அவர் ஆரம்பித்திருக்காவிட்டால் அவருக்கும் எனக்கும் இடையில் உறவுமுறை ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்திருக்காது.

வீரகேசரி வாரவெளியீட்டின் ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றிய காலஞ்சென்ற பொன். இராஜகோபால் மூலமாகத்தான் எனக்கும் சாமி அவர்களுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. தலைநகரில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் சாமி அவர்களுக்கு ஏற்கனவே இருந்திருந்தாலும், இராஜகோபாலுடனான சந்திப்பையடுத்தே அந்த எண்ணம் விரைவாக நடைமுறைச் சாத்தியமாவதற்கான வழி பிறந்தது எனலாம். தினக்குரலில் என்னைப் போன்றவர்களின் இணைவு இராஜகோபாலின் முயற்சியின் விளைவானது.

பத்திரிகையாளன் என்ற வகையில் எனது தொழில் வாழ்க்கைப் பயணத்தின் இடைநடுவில் சாமி அவர்களை சந்தித்த நாள் தொடக்கம் அவர் எனக்கு இன்னொரு தந்தை. எனக்கு மாத்திரமல்ல, என்னைப் போன்று தினக்குரலில் பணியாற்ற வந்த இளைய வர்களுக்கு எல்லாம் அவர் தந்தை என்று கூறுவதே பொருத்தம். நெருக்கடிகள் ஏற்பட்ட வேளைகளில் எல்லாம் அவர் நிலைகுலையாமல் உறுதியுடன் நின்று, நாம் துவண்டுபோகாமல் வழிகாட்டிய பாங்கை இந்த சந்தர்ப்பத்தில் கண்கள் பனிக்க நினைத்துப் பார்க்கிறேன்.

ஏற்கெனவே பல வருடங்கள் பத்திரிகைத்துறையில் பணியாற்றியவர்களைக் கொண்ட, ஒப்பீட்டளவில் இளவயதிரான பலரை உள்ளடக்கிய குழாம் ஒன்று அதன் எதிர்காலத்தை சாமி அவர்களிடம் ஒப்படைத்த வண்ணமே தினக்குரலில் பணியாற்றத் தொடங்கியது. அவர்களில் சிலர் தங்களது எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுமோ என்று கவலை கொள்ள ஆரம்பித்த வேளைகளில் எல்லாம் அவர்களுக்கு தைரிய மூட்டுவதற்கு எமக்கு தெம்பைத் தந்தது சாமி அவர்களின் மனஉறுதிதான்.

வர்த்தகத் துறையில் சாமி அவர்கள் கைவைக்காத கிளையே இல்லை என்று கூறலாம். அச்சுத் துறையிலும் அவர் பெயரெடுத்தவராக விளங்கிய போதிலும், ஏற்கனவே பல தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில், இன்னொரு பத்திரிகையை ஆரம்பிப்பது என்பது அதுவும் உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த கடந்த நூற்றாண்டின் 90 களின் நடுப்பகுதியில் பாரிய சவால்மிக்க பணியாக இருந்தது. அந்தச் சவாலை துணிச்சலுடன் எதிர்கொண்டு கால் நூற்றாண்டைக் கடந்து தினக்குரல் பயணிக்கிறது என்றால் அதற்கு சாமி அவர்கள் எமக்கு தந்த ஊக்கமும் தைரியமும் அவற்றின் விளைவாக ஊழியர்களுக்கு ஏற்பட்ட உத்வேகமுமே அடிப்படைக் காரணங்கள்.

நான் முதலில் தினக்குரலில் செய்தி ஆசிரியராக பணியாற்றினேன். இராஜகோபால் எமது வழிகாட்டி. ஆறுமுகம் சிவனேசச்செல்வன் பிரதம ஆசிரியர். தினக்குரலின் முதலாவது இதழ் ஞாயிறு பத்திரிகையாக 1997 ஏப்ரில் 6 ஆம் திகதி வெளியானது. அதை வெளிக்கொண ருவதற்கு எமது குழாம் சில வாரங்களாக கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. பத்திரிகை வெற்றிகரமாக வெளிவந்ததால் மகிழ்ச்சியடைந்த பேரும் ... களைத்துப் போயிருந்தார்கள்.

மறுநாள் திங்கட்கிழமை தினசரிப் பத்திரிகையை வெளியிடுவதை தாமதித்து சில வாரங்களுக்கு பிறகு தினசரியை வெளியிடுவோம் என்று ஆசிரியபீட உறுப்பினர்களில் சிலர் யோசனை கூறினார்கள். ஆனால், சாமி அவர்கள் அதற்கு இணங்கவில்லை. திட்டமிட்டபடி திங்கட்கிழமை தினசரி தினக்குரல் வெளிவந்தேயாக வேண்டும் என்பதில் அவர் காட்டிய உறுதிப்பாடு சோர்வடைந்திருந்தவர்களை தட்டியெழுப்பியது. அச்சியந்திரப் பிரிவில் இருந்து தினசரிப் பத்திரிகையின் முதல் பிரதிகளை அவரே மகிழ்ச்சியுடன் எடுத்துவந்து ஆசிரிய பீடத்துக்கு தந்தார்.


தினக்குரலின் உய்வின் சாத்தியம் குறித்து ஆரம்ப நாட்களில் 'பல்லி' சொன்ன பலருக்கு நாளைடைவில் ஏமாற்றமே மிஞ்சியது. தலைநகரில் இருந்து வெளிவரும் இன்னொரு தமிழ்ப்பத்திரிகையாக தினக்குரல் தன்னை குறுகிய காலத்திற்குள்ளேயே நிலைநிறுத்தக் கூடியதாக இருந்தது. அதன் வளர்ச்சிக்காக தாபகர் சாமி அவர்கள் தொடக்கம் கடைநிலை ஊழியர் வரை கடுமையாக உழைத்ததை கண்ட சாட்சிகளில் ஒருவன் நான். பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை நடுநிசியிலும் சாமி அவர்கள் அலுவலகத்துக்கும் அச்சியந்திரப் பகுதிக்கும் இடையே இளைஞர்களே வியக்கும் வண்ணம் ஓடிக் கொண்டிருப்பார். ஆரம்பக்கட்டத்தில் பத்திரிகையை நாடுபூராவும் விநியோகிப்பதற்கான பணிகளில் அவரும் புதல்வர்களும் கூட முழுமூச்சாக ஈடுபட்டதை கண்டவன் நான்.

ஒரு கட்டத்துக்கு பிறகு தலைநகரில் இருந்து மாத்திரமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தும் தினக்குரலின் பிராந்தியப் பதிப்பு வெளியானது. குடாநாட்டை நாட்டின் ஏறைய பாகங்களுக்கும் வெளியுலகிற்கும் காட்டுவதற்கும் நாட்டின் ஏனைய பாகங்களையும் வெளியுலகையும் குடாநாட்டுக்கு காட்டுவதற்குமான ஒரு முயற்சியாக அமைந்த அந்த பிராந்தியப் பதிப்பு சாமி அவர்களின் விடாமுயற்சியினால் வெற்றி கண்டது.

சமூகத்தில் எனக்கு ஏதாவது அடையாளம் இருக்குமானால் அதற்கு காரணமானவர்களில் சாமி அவர்களும் ஒருவர். சென்றுவாருங்கள் சாமி ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி விகாரையும் தமிழ் மக்களின் அரசியலும்



கந்தையா அருந்தவபாலன்

தையிட்டியில் சட்டத்துக்கும் அறத்துக்கும் எதிரான வகையில் இராணுவத்தால் கட்டமைக்கப்பட்ட பௌத்த விகாரை தொடர்பான விடயம் மீண்டும் கொதிநிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்விகாரையை அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டுமென தமிழ்த் தேசிய முன்னணி தொடர்ந்து போராடி வந்தபோது கண்டும் காணாததுபோல இருந்த கட்சிகளும் எதிர்மறையான விமர்சனங்களை முன்வைத்த பல தலைவர்களும்கூட இம்முறை அதனை அகற்றத்தான் வேண்டுமென அறிக்கைகள் விட்டதுடன் கடந்த பூரணை நாளில் நடைபெற்ற போராட்டத்திலும் பங்கேற்றிருந்ததைக் காணமுடிந்தது. இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வமான நிர்வாகிகள் எனத்தம்மை அடையாளப்படுத்தும் எவரும் இதுதொடர்பான கருத்துக்களை வெளியிடவில்லை என்பதுடன் போராட்டத்திலும் பங்கேற்கவில்லை. எனினும் அக்கட்சியின் மத்தியகுழுவால் உத்தியோகபூர்வமாகத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வழமைபோலவே தமது ஆதரவைத் தெரிவித்திருந்ததுடன் போராட்டத்திலும் பங்கேற்றிருந்தார். ஆச்சரியப்படத்தக்க வகையில் இம்முறை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தவும் தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்ததுடன் அக்கட்சியின் உறுப்பினர் சிலரும் போராட்டத்தில் பங்கேறிருந்தனர்.

இப்பிரச்சினை தொடர்பாக இதுவரை அதிகளவு அக்கறை காட்டாத அரசியல் தரப்புகளும் அவ்விகாரை அமைக்கப்பட்டதை தொடக்கத்திலிருந்தே அனுசரித்துச் சென்ற டக்ளஸும் வழமைக்கு மாறாக இவ்விடயத்தில் தமிழ்த் தேசிய முன்னணியுடன் ஒரேகோட்டில் வந்தமை ஒருவகையில் வரவேற்கப்பட்டாலும் கூட அது தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் எழாமலில்லை. இவ்விகாரைக்கு எதிரான போராட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் தமிழ்த் தேசிய முன்னணியினர்மீது தொடர்ந்து முன்வைக்கப்பட்டுவரும் பிரதான குற்றச்சாட்டு அதுகட்டி முடிக்கும்வரை இருந்துவிட்டு முடிந்த பின் அதனைக் கையலெடுத்தது குறுகிய அரசியல் நோக்கத்திற்கானது என்பதாகும். ஆனால் அதனை ஆராய்ந்து பார்த்தால் தவறானது என்பது புரியும். பொதுமக்கள் அனுமதிக்கப்படாத உயர்பாதுகாப்பு வலயத்துள், தேவைப்படும் நிறுவனங்களின் அனுமதி எதுவுமில்லாமல், முழுக்க முழுக்க இராணுவத்தினால் இவ்விகாரை அமைக்கப்படும்போதே அதனை அக்கட்சி பொதுவெளிக்குக் கொண்டுவந்திருந்ததுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலும் அதனைத் தடுப்பதற்கான முன்மொழிவைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருந்தது. அத்துடன் இவ்வாறான விடயங்களுக்கு இலங்கையில் சட்டரீதியாக நீதியைப் பெறமுடியாது என்பது ஒருபுறமிருக்க தமிழ் மக்களைப் பொறுத்து இது சட்டச் சார்ந்த பிரச்சினையுமன்று.

ஏனைய கட்சிகள் மீது இப்போது வைக்கப்படும் பிரதான குற்றச்சாட்டு இதுவரை கண்டும் காணாதது போலிருந்த கட்சிகள் இப்போது வரிந்து கட்டிக்கொண்டு முன்னிற்பது வரவிருக்கும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தலை நோக்கமாகக் கொண்டது என்பதாகும். இதுவரை தமிழ்த் தேசிய முன்னணியினர் தங்களை அழைக்காது தனியே போராட்டத்தை முன்னெடுந்திருந்தார்கள், ஆனால் இம்முறை காணி உரிமையாளர்கள் அழைத்தமையினால் தாங்கள் ஆதரவை வழங்கினோம் என அவர்கள் சாட்டுக் கூறினாலுங்கூட வரவிருக்கும் தேர்தலுக்கான நோக்கம் மட்டுமன்றி கடந்த தேர்தலின் கசப்பான அனுபவமும் இதற்குப் பின்னாலுள்ளது என்பதை மறுக்க முடியாது.


அதேவேளை "கோழிபிடித்த கள்ளனும் கூடநிண்டு உலாவினான்" என்பது போல இவ்விகாரை அமைப்பதற்கு மறைமுக அனுசரணை வழங்கிவந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸும் இதற்கு ஆதரவு தெரிவித்ததன் நோக்கந்தான் என்ன? எப்போதும் சாத்தியமான வழிமுறைகளில் தீர்வு எனக்கூறிக்கொண்டு தமிழ் மக்கள் மீதான அரசின் சாத்தியமான அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புகளுக்கு எல்லாம் நேற்றுவரை ஆதரவளித்துவந்த டக்ளஸ் இப்போது சாத்தியமான தீர்வை விடுத்து அதனை அகற்ற வேண்டும் என்று கூறுவதன் காரணம் என்ன? அவர் இப்போது புனிதராக மாறிவிட்டாரா என்ற கேள்வி மக்களிடையே எழுவது இயல்பானது. கடந்த தேர்தல் ஏனைய அரசியல் தலைவர்களுக்கு அளித்ததைப்போல இவருக்கும் சுடலை ஞானத்தை அளித்துவிட்டதோ என்னவோ. கடந்த முப்பது ஆண்டுகளில் சில ஆண்டுகள் தவிர்த்து 'கபினற்' அமைச்சராவே இருந்துவந்த டக்ளஸ் தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசின் அத்தனை கொடுமைகளுக்கும் பங்காளன் என்பதை அவர் ஏற்கவேண்டும். உண்மையில் அவர் தனது பாவத்தைக் கழுவ விரும்புகிறாரா அல்லது இதன் மூலம் நாட்டில் இனவாதத்தைத் தூண்டி தனது எஜமானர்களை ஆட்சிக்கட்டிலில் அமர்த்த விரும்புகிறாரா என்பது அவருக்கே வெளிச்சம்.

இப்போது ஆதரவு தெரிவிக்கும் சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட நல்லாட்சிக்காலத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தையிட்டி விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தார்மீக உரிமையற்றவர்களே. நல்லாட்சிக்காலத்தில்தான் வடக்கு கிழக்கில் தொல்பொருள் தேடலின்மூலம் விகாரைகளுக்கான கால்கோள்கள் வேகம்பெற்றன என்பதை மறுக்க முடியாது. வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டுவதற்கான நிதிக்கு ஒப்புதல் வழங்கியபோது சிங்கள பௌத்த தேசியவாதிகளாகத் தம்மைக் காட்டிய இவர்கள் தையிட்டி விகாரை விடயத்தில் தமிழ்த் தேசியவாதிகளாக தம்மைக்காட்ட முனைவது தார்மீகமாகுமா? அதனாற்றான் உத்தியோகபூர்வ தமிழரசுத்தலைவர்கள் அல்லது சுமந்திரன் அணியினர் தமது ஆதரவைத் தெரிவிக்கவில்லையோ என்னவோ? இந்தவிடயத்தில் டக்ளஸுக்கும் இவர்களுக்குமிடையில் அதிக வேறுபாட்டைக் காணமுடியாது. இவ்வாறு அரசியல் கட்சிகளினதும் அவற்றின் பெரும்பாலான தலைவர்களதும் தமிழ்த் தேசியம் தொடர்பான இரட்டை நிலைப்பாடே அவர்கள் மக்களின் நம்பிக்கையை நாளாந்தம் இழந்து வருவதற்கான பிரதான காரணம். இது அவர்களை மட்டுமல்ல தமிழ் மக்களின் அரசியலையும் பாதிக்கிறது என்பதை அவர்கள் எப்போது உணருவார்களோ தெரியவில்லை.

அரசியல் கட்சிகள் விகாரையை வைத்து அரசியல் செய்வது சரியா? தவறா? கட்சி நலன்சார்ந்து குறுகிய நோக்கிலான அரசியல் செய்வதுதான் தவறு. தமிழ் மக்களின் நலன்சார்ந்து அது செய்யப்பட வேண்டியதொன்றே. உரிமைகளுக்காகப் போராடும் ஓரினம் தனக்குக் கிடைக்கும் சாதகமான எந்தவொரு துரும்பையும் பயன்படுத்தி அரசியல் செய்வது சரியானதே. அது மக்களை ஒரணிப்படுத்தவும் ஆக்கிரமிப்பாளரை அம்பலப்படுத்தவும் தேவையானதே. அதுவும் இன்று எல்லோரும் இன, மத பேதமற்ற இலங்கையர்கள், எல்லோரும் சமமானவர்கள் என்ற கோசத்துடன் எமது இன அடையாளத்தைத் தந்திரமாக சிங்களத்துடன் சங்கமமாக்க முனையும் புதிய அரசினது போலி முகத்தைக் கிழிப்பதற்கு மிக அவசியமானதே.

ஒரு மதவழிபாட்டிடத்தை அகற்றுவது ஏற்கக்கூடியதா? சாத்தியமானதா? ஏற்பது, சாத்தியம் என்பது ஒருபுறமிருக்க, முதலில் அது வழிபாட்டிடமா? ஆளில்லாத ஊரில் தேத்தண்ணீர் ஆத்தினால் அது தேத்தண்ணிக்கடையா? தையிட்டி விகாரை ஆன்மீகத்தின் வடிவமன்று. அது ஆக்கிரமிப்பின் வடிவம். அது தமிழ் மக்களின் நிலம் மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பின் வடிவம். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த சைவ மக்களை அகற்றிவிட்டு பௌத்தர்களே இல்லாத இடத்தில் அதுவும் இன்னொருவருக்குச் சொந்தமான காணியில் சட்ட ஒப்புதல்கள் எதுவுமின்றி அதுவும் இராணுவம் விகாரையைக் கட்டுவதை ஆக்கிரமிப்பின் சின்னமாகக் கருதாமல் வேறு எவ்வாறு கருதுவது? உண்மையில் தையிட்டி விகாரை மதத்துடன் சம்பத்தப்பட்ட ஒன்றன்று. அது ஒரு தேசிய இனத்தின் வாழ்வுரிமையுடன் சம்பந்தப்பட்டது. நல்லிணக்கத்தைப் பேணுவதாகக் கூறிவரும் அரசும் இராணுவமும் மக்கள் மீளக்குடியேறியதும் அவர்களுக்கு அரச நிலமொன்றில் ஒரு புதிய கோயிலைக் கட்டிக்கொடுத்திருந்தால் அல்லது அழித்த கோயிலைப் புனரமைப்புச் செய்து கொடுத்திருந்தால் அவர்கள் கூறுவது உண்மை என நம்பலாம்.

அப்படியானால் அவ்விகாரையை இடித்து அகற்றவேண்டுமென்று தமிழ் மக்கள் விரும்புகிறார்களா? தமிழ் மக்களின் விருப்பம் ஒருபுறமிருக்கட்டும். தமது ஆட்சியில் இன, மத வேறுபாடு எதுவுமிருக்காது. சட்ட ஆட்சியே நடைபெறும் என்று கூறிவரும் புதிய அரசாங்கம் சட்டமுரணாகத் தனியார் காணியில் இராணுவத்தால் கட்டப்பட்ட விகாரையை அகற்றி சட்டத்திற்கு மேலாக இராணுவமோ அல்லது பௌத்தமோ இல்லை என்பதை நிரூபிக்க முதலில் முன்வரட்டும். அனுரா முன்வருவாரா? அப்போதுதான் அவர்கள் கூறும் மாற்றம் உண்மையானது என தமிழ் மக்களால் நம்பமுடியும்.



**தமது ஆட்சியில் இன, மத வேறுபாடு எதுவுமிருக்காது. சட்ட ஆட்சியே நடைபெறும் என்று கூறிவரும் புதிய அரசாங்கம் சட்டமுரணாகத் தனியார் காணியில் இராணுவத்தால் கட்டப்பட்ட விகாரையை அகற்றி சட்டத்திற்கு மேலாக இராணுவமோ அல்லது பௌத்தமோ இல்லை என்பதை நிரூபிக்க முதலில் முன்வரட்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**குருமண்காடு, வவுனியா.**



**கேள்வி:** புதிய அரசமைப்பு, இனப் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றத்தில் கூட்டாக செயல் படுவது தொடர்பில் உரியநேரம் வரும் போது கலந்துரையாடலாம், என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சி யின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம். அதுகுறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** நினைப்பதற்கு என்ன இருக்கின்றது. பாராளுமன்றத்தில் எட்டு ஆசனங்களைக் கொண்டிருக்கும் தமிழ் அரசுகட்சி உட்கட்சி மோதல்களால் தலைவர் யார் என்பது தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றது. பதில் தலைவராக சிவஞானம் ஐயா இருந்தாலும் அவர் எத்தகைய 'அதிகாரங்களுடன்' இருக்கிறார் என்பது ஒன்றும் இரகசியமானது அல்லவே. தமிழ் அரசு கட்சிக்குள் ஏற்பட்டிருந்கும் இந்த அவலநிலையை தனக்கு சாதகமாக மாற்றுவதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நினைப்பதை புரிந்துகொள்ள முடியாத நிலையில் தமிழ் அரசு கட்சி இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த முயற்சியை தொடங்கியபோதே எனக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வந்தது. அப்போது முப்பதுக்கும் மேற்பட்ட ஆயுத இயக்கங்கள் இயங்கிக்கொண்டிருந்த காலம் அது. முப்பது இயக்கங்களில் மிகச்சிறிய இயக்கம்ஒன்று இயக்கங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றது. அந்த முயற்சி பற்றி அந்த இயக்கத் தலைவரை இந்த வியுக்தியார் பேட்டிகண்டபோது, அவர் சொன்னார், புலிகள் இயக்கத்தையும் எங்கள் கூட்டில் இணைத்துக் கொள்ள தயாராக இருக்கிறோம் என்று. அதுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. பாராளுமன்றத்தில் கூட்டாக செயற்படுவது குறித்து தமிழ் அரசுதான் மற்றவர்களை கேட்கவேண்டும்.

---

**எஸ் பீற்றர்போல்,**
**இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**



**கேள்வி:** வடக்கு மக்களுக்கு நாங்களே நிரந்தரமான வர்கள். ஏனைய நாடுகளைப் போன்று தங்களுடைய மக்களின் நலனுக்காகவோ அல்லது பொருளாதார ஒத்து ழைப்புக்காகவோ நாங்கள் தூதரகத்தை ஆரம்பிக்கவில்லை. முழுமையாக உங்களுக்காகவே (வடக்கு மக்கள்) யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகத்தை 2010இல் ஆரம்பித்தோம் என்று யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்துள்ளாரே.?

**வியுக்தியார்:** உண்மைதான். யாழ்ப்பாணத்தில் தூதரகம் அமைக்கப்பட்டது நமக்காகத்தான். அதனால்தான் நமது மீனவர்கள் தினமும் அந்த தூதரகத்திற்கு முன்னால் நின்று போராடுகின்றார்களோ தெரியவில்லை. அதனால்தான், யாழப்பாணத்தின் பருத்தித்துறை கடற்கரை வந்து தமிழக மீனவர்கள் இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடுகின்றார்களோ தெரியவில்லை. வடக்கு மக்களுக்கு தாங்களே நிரந்தரமானவர்கள் என்று அவர் எதைவைத்து கூறுகின்றார் என்பது தெரியவில்லை. நமது அப்புக்குட்டியர் கூறியிருந்ததுபோல, நாங்கள் நிரந்தரமாக அவர்களிடம் 'கையேந்தவேண்டும்' என்பதற்காகத்தான், அவர்களே எமது பிரச்சினைக்கு தீர்வு என்று பெற்றுத் தந்த பதின் மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்து வதை சிறிலங்கா அரசாங்கங்கள் அமுல்படுத்த மறுக் கின்றபோதும், அவர்கள் கண்டுகொள்ளாமலே இருக்கிறார்களோ தெரியவில்லை. அது முழுமையாக அமுல் படுத்தப் பட்டுவிட்டால், நாங்கள் தங்களிடம் நிரந்தரமாக கையேந்தாமல் விட்டுவிடுவோமோ என்று நினைக்கிறார்களோ தெரியவில்லையே.

---

**சி. ராஜேஸ்வரன்,**
**கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** சீனாவின் நல்லிணக்கம் மற்றும் இன விவகாரங்களுக்கான அமைச்சர் பான் யூ தலைமையில் உயர் மட்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது. எதிர் வரும் புதன்கிழமை ஐந்து நாள் பயணமாக இலங்கை வரும் இந்தக் குழு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்டவர்களை சந்தித்துப் பேசவுள்ளதுடன் தொடர்ந்து யாழ்ப்பாணத்



துக்கும் கண்டி மாவட்டத்துக்கும் இந்தக் குழு வருகை தரவுள்ளதாமே. சீன அமைச்சர் அது என்ன அம்பாந்தோட்டைக்கு போகாமல் யாழப்பாணம் வருகிறார்?

**வியுக்தியார்:** அவர் வரவிருப்பதை அறிந்துதானே நமது இந்தியத் தூதுவர் அவசரம் அவசரமாக ஊடகவியலாளர்களை அழைத்து நாங்கள்தான் உங்களுக்கு நிரந்தரமானவர்கள் என்று ஞாபகப்படுத்தினார். வரவிருப்பவர் சீனாவின் நல்லிணக்கம் மற்றும் இனவிவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சரல்லவா. இனவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்தால், இனவிவகாரங்களில் அல்லது நல்லிணக்கம் தேவையான இடங்களுக்குச் செல்லத்தானே வேண்டும் அதுதான் அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகிறார் என்று நினைக்கின்றேன். இதுவரை காலமும் தமிழ் மக்கள் இந்தியாவின் விருப்பத்திற்கு அமையத்தான் அரசியல் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது அவர்களும் கொஞ்சம் நிலமைகளை சரியாக புரிந்துகொண்டுவிட்டது போலத்தான் தெரிகின்றது. அதனால்தானோ என்னவோ, சீன ஆதரவு பெற்ற கட்சி ஒன்றை இந்தத் தடவை நம்பியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கவனித்துவிட்டுத்தான் சீன அமைச்சர் யாழ்ப்பாணம் வருகிறார்போலும்.

---

**போல் சத்திதாசன்,**
**அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**



**கேள்வி:** உள்ளூராட்சி தேர்தல் முறையில் ஒரு கட்சி ஆட்சியமைப்பது கடினமானது. இதனை தற்போது அனைவரும் ஏற்றுள்ளனர். எனவே, நாம் முன்னர் சிபாரிசு செய்தது போன்று தனியாக தேர்தலை சந்தித்து சேர்ந்து ஆட்சியமைப்பது தொடர்பில் ஏனைய (தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பங்காளிகள்) கட்சிகளின் தலைவர்களு டன் பேசியுள்ளோம் - என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளாரே. அவர் சொல்வது சரி என்றால், அவர்கள் முதலில் உள்ளூராட்சி தேர்தலை தனியாகச் சந்திப்பது என்று எடுத்த முடிவும் சரியானது தானே?

**வியுக்தியார்:** அவர் சொல்வது சரியானதுதான். ஆனால் அதுவல்ல முதலில் நடந்த பிரச்சினை. அவர் சொல்வதுபோல தனியாக தேர்தலை் சந்திப்பது பின்னர் சேர்ந்து ஆட்சியமைப்பது என்பது தமிழ் அரசு தனித்து முடிவெடுத்ததுதான் அப்போது பிரச்சினையை தோற்றுவித்தது. அவர் சொல்வதுபோல தனியாக தேர்தலை சந்திக்கும் முடிவெடுத்தபோது இருந்த நிலமை இப்போது இல்லையே. அப்போது தனியாக போட்டியிட்டாலும் தமிழ் அரசு அதிக இடங்களைப் பெறும் நிலமை இருந்தபோது அவர்கள் யோசிப்பது சரியானதாக இருக்கலாம். உதாரணத்திற்கு யாழ். மாநகர சபையில் எல்லா வட்டாரங்களிலும் தமிழ் அரசு வெற்றி பெற்றாலும் தனித்து ஆட்சியமைக்க முடியாதுதான். அப்போது மற்றயை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியமைத்திருக்கலாம். ஆனால் இப்போது நிலமை தலைகீழாக அல்லவா போய்விட்டது. இப்போது யாழ்ப்பாண மாநகர சபையை எடுத்தால், ஒவ்வொரு வட்டாரத்திலும் தேசிய மக்கள் சக்தி அல்லவா வெற்றிபெறும் போலத் தெரிகின்றது. இப்போது ஆட்சியமைப்பது அல்ல முக்கியமானது. அதைவிட தமிழ் தேசியக்கட்சிகள் தான் எல்லா இடங்களிலும் அதிகூடிய இடங்களைப் பெற்றார்கள் என்ற நிலமையைத் தான் இப்போது காட்ட வேண்டியிருக்கின்றது. அதற்காக எல்லா தமிழ் தேசியக் கட்சிகளும் ஒன்றிணையாவிட்டால், தமிழ் அரசு பாராளுமன்ற தேர்தல் முடிவுகளையே சந்திக்கும். அதைத்தான் அவர்களும் விரும்புகின்றார்களோ தெரியவில்லை.

---

**கே. கணேஷ்,**
**பிரதான வீதி, ஹட்டன்.**

**கேள்வி:** "உலகின் வேறு எந்த நாட்டையும்போல இலங்கையும் தனித்து செயல்பட முடியாது. உலகளாவிய இணைப்பு - ஒன்றையொன்று சார்ந்திருந்தல் ஆகியன இந்த பூகோளமயமாக்கல் யுகத்திலும்கூட ஒரு விதிமுறையாக உள்ளது. இலங்கை ஏனைய நாடுகளுடன் ஈடுபாட்டை பேணுவது அவசியம். இதற்கு உலகின் போக்குகளை சரியாக புரிந்துகொள்ளும் திறன் அவசியம்.", இவ்வாறு இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** ஆமாம் நானும் அந்தச் செய்தியைப்




பார்த்தேன். அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை அறிவதற்காக திரும்பத்திரும்ப அதனை வாசிக்க வேண்டி யிருந்தது. இலங்கை ஏனைய நாடுகளுடன் ஈடுபாட்டை பேணுவது அவசியம் என்கிறார் சரி, இதற்கு உலகின் போக்குகளை சரியாக புரிந்துகொள்ளும் திறன் அவசியம் என்கிறரே, அதாவது அந்தத் திறன் இலங்கையிடம் இப்போது இல்லை என்கிறார் என்றுதான் புரிந்துகொள்ள முடிகின்றது. இன்று உலகின் போக்குகளை யாராலும் புரிந்துகொள்ள முடியுமா என்று தெரியவில்லையே. உலகின் போக்கை இன்றுவரை தீர்மானிக்கின்ற சக்தியாக அமெரிக்காதான் இருந்துவருகின்றது. ஆனால் அமெரிக்காவில் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கின்ற அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இன்று என்ன சொல்வார் நாளை என்ன சொல்வர் என்பது அவருக்கே தெரியும் போல தெரியவில்லையே. இந்த நிலையில் உலகத்தின் போக்குகளை சரியாக புரிந்துகொள்வது என்பது கடினமானதுதான்.

---

**ஜி. கணேசமூர்த்தி**
**வாழைச்சேனை, கிழக்கு மாகாணம்.**



**கேள்வி:** 2025ஆம் ஆண்டு வரவு - செலவுதிட்டத் தில் கிழக்கு மாகாணம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் கிழக்கின் அபிவிருத்தி பக்கத்து நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளாரே. அது எப்படி பக்கத்து நாட்டிடம் கொடுக்கப்படுலாம்?

**வியுக்தியார்:** அவர் எதற்காக அப்படி சொல்கிறார் என்று தெரியவில்லை. கிழக்கில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் ஒன்றை பக்கத்து நாட்டுடன் சேர்ந்து அமைக்கவிருப்பதாகத்தான் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. ஆனால், வேறு எந்தத்திட்டம் பற்றியும் இதுவரை தெரியவரவில்லை. அவர் இதனை மகிழ்ச்சியுடன் கூறுகிறாரா அல்லது விரக்தியில் கூறுகிறாரா என்பது கூட தெரியவில்லை. ஆனால் அவர் சொல்வது சரியாக இருந்தால், கிழக்கை அவர்களுக்கும் வடக்கை வேறு யாருக்கும் கொடுக்கப்போகிறார்களோ தெரியவில்லையே. கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய துருப்புக்கள் உக்ரைனில்? அமெரிக்காவுடன் முரண்படும் ஜெலன்ஸ்கி!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்காவை மீறி பிரித்தானியத் துருப்புக்கள் உக்ரைன் போரில் நேரடியாக கலந்து கொள்வது சாத்தியமற்ற ஒரு செயலாகவே கருதப்படுகிறது. பிரித்தானிய துருப்புக்கள் உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் அரசியல் ரீதியான இலாபங்களுக்கான வாய்ச்சவாடல்களாகவே கருதப்படுகின்றன.

இவை எல்லாவற்றவையும் விட பிரித்தானிய பொது மக்கள் தங்கள் குழந்தைகளை இன்னோர் நாட்டில் பலிக்கடாவாக்க சம்மதிக்க மாட்டார்கள். இரண்டாம் உலகப் போரின் பின்னர் பிரித்தானிய படைகள் எந்தவொரு பாரிய படை நகர்த்தல்களையும் நடாத்தவில்லை என்பதையும் அவதானிக்க வேண்டும்.



உக்ரைனிய போரில் அமெரிக்காவின் புதிய தலைமை தமது நிலைப்பாட்டை மாற்றுவதால், இங்கிலாந்து தனது துருப்புக்களை உக்ரைனுக்கு அனுப்ப வாய்ப்புள்ளது என்று பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை விரைவு படுத்துவதில் இங்கிலாந்து முன்னணிப் பங்காற்றத் தயாராக உள்ளது.

தேவைப்பட்டால், தமது சொந்தப் படைகளை தரையில் நிறுத்துவதன் மூலம் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களுக்கு பங்களிக்கத் தயாராகவும் விருப்பமாகவும் இருப்பதும் இதன் பொருள் என்றும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் நாட்டுக்கு பிரிட்டிஷ் படைகள் அனுப்புவதை நான் எளிதாகச் சொல்லவில்லை. பிரிட்டிஷ் படைவீரர்களையும் பெண்களையும் ஆபத்தில் ஆழ்த்துவதில் வரும் பொறுப்பை நான் மிகவும் ஆழமாக உணர்கிறேன்.

ஆயினும் உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்வதில் எந்தவொரு பங்கும் நமது ஐரோப்பிய கண்டத்தின் பாதுகாப்பையும் பிரித்தானிய நாட்டின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு உதவுவதாகும்.

இந்தப் போரின் தற்போதைய முடிவு, அது வரும் போது, புட்டின் மீண்டும் தாக்குவதற்கு முன்பு ஒரு தற்காலிக இடைநிறுத்தமாக மாற முடியாது. மீண்டும் ரஷ்யா தனது படையெடுப்பை முழுமையாக நிறுத்த வேண்டும் என பிரித்தானிய பிரதமர் தெரிவித்தார்.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் அவசரமாகக் கூட்டியிருந்த பாரிஸ் சந்திப்புக்கு முன்னதாகப் பேசுகையில், அமெரிக்க அதிபர் தலைமையால் உக்ரைனை பேச்சுவார்த்தைகளில் இருந்து விலக்குவதற்கு எதிராக எச்சரித்தார். அதை அமெரிக்க-தலிபான் பேச்சுவார்த்தைகளுடன் ஒப்பிட்டும் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்தார்.

உக்ரைன் நாட்டுக்கு குறைந்தளவு 100,000 பிரித்தானிய துருப்புக்கள் தேவைப்படலாம் என்று மதிப்பிடுகின்றனர். ஆனால் உண்மையில் யார் தான் ரஷ்யாவை எதிர்த்து போரிட போகின்றார்கள் என பிரித்தானிய அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பிரிட்டனின் இராணுவம் வளங்களால் நிரம்பி வழிவதில்லை என்பதும் மற்றொரு முக்கிய விடயமாகும். மேலும் இங்கிலாந்து ஜெனரல்கள் அதிக பாதுகாப்பு செலவினங்களைக் தற்போது கோரி வருகின்றமை அரசுக்கு உள்ள பாரிய தலைவலியாகும்.

ஆனாலும் இரண்டாம் உலகப் போரின் பின்னர் பிரித்தானிய படைகள் எந்தவொரு பாரிய படையெடுப்பை எந்தவொரு நாட்டின் மீதும் நடாத்தவில்லை. 1980களில் ஆர்ஜன்டீனா போரைத் தவிர பிரித்தானிய படைகள் பாரிய அளவில் போரிடவில்லை.

நேட்டோவில் பிரித்தானியா அங்கம் வகித்தாலும், உக்ரைன் போரில் நேரடியாக கலந்து கொள்வது சாத்தியமற்றதாகும். தற்போது அமெரிக்காவை மீறி உக்ரைனுக்கு ஆதரவாக பிரித்தானிய துருப்புக்கள் உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வெறும் வாய்ச்சவாடல்களாகவே கருதலாம்.

இதற்கிடையில், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத், உக்ரைன் நேட்டோவில் இணையும் யோசனையை நிராகரித்துள்ளார். உக்ரைனின் நேட்டோ நம்பிக்கைகள் மற்றும் 2014 க்கு முந்தைய எல்லைகள் யதார்த்தமானவை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் ட்ரம்ப் உண்மையில் ரஷ்யாவுடன் எங்கு நிற்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க ஐரோப்பா போராடி வருகிறது. ரஷ்யாவுடன் எப்போதும் நட்புச் சூழ் நிலையை உருவாக்க ட்ரம்ப் முயன்று வருகிறார். ஆயினும் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் ரஷ்யாவை பகைப்பது என்பது பலருக்கும் தெரிந்த விடயம் தான். ஆயுத விற்பனைக்கும் போர்ப்பகைமை சூழலை தங்கள் அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

ஐரோப்பிய பாதுகாப்புக்கு அமெரிக்கா இனியும் உதவாது என்பதால் பிராந்தியத்துக்கான பொதுவான ராணுவத்தை உருவாக்க வேண்டும் என்று உக்ரைன் அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். ஆனாலும் இதனை உருவாக்குவது பற்றி அவர் எதனையும் தெளிவாக தெரிவிக்கவில்லை.

அண்மையில் நடந்த மியூனிச் பாதுகாப்பு மாநாட்டில் பேசிய அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ், ஐரோப்பிய பிராந்தியத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பல்லாண்டுகளாகத் தொடர்ந்துவரும் நல்லுறவு முடிவுக்கு வருவதை தெளிவுபடுத்திவிட்டார். இதனாலேயே ஐரோப்பிய ராணுவத்தை உருவாக்குவதற்கான நேரம் வந்துவிட்டது என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

எனவே, எதிர்கால நிலமை இதுவரை இருந்தது போல் இருக்காது. அதற்கேற்ற வகையில் ஐரோப்பியப் பிராந்தியம் தன்னை நிலைநிறுத்தி தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இனி வரும் காலங்களில் ஐரோப்பிய பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு அச்சுறுத்தல் வரும்போது உதவியளிக்க அமெரிக்கா மறுத்து விடுவதற்கான வாய்ப்புள்ளது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

எனவே, இந்த நேரத்தில் நமக்குத் தேவை ஐரோப்பியாவுக்கான பொது ராணுவம்தான். ஏற்கெனவே நமக்கென்று ஒரு தனி ராணுவத்தை அமைப்பது குறித்து பல ஐரோப்பிய தலைவர்கள் பேசியுள்ளனர். தற்போது அதனை நிறைவேற்றுவதற்கான தருணம் வந்துள்ளது என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புடன் பாரியளவில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி முரண்பட்டுள்ள நிலையில், ஐரோப்பிய பொது இராணுவம் உருவாக்கப்படுவது சாத்தியமானதாக தெரியவில்லை. பிரித்தானியாவில் தற்போதைய அரசு பொதுமக்கள் கருத்தை அறியாமல் தங்கள் சொந்த வீரர்களை அந்திய நாட்டில் பலிக்கடாவாக்க சம்மதிக்க மாட்டார்கள் எனபதும் உண்மையே.

ஐரோப்பிய நாடுகளில் தீவிரமடையும் ரஷ்ய எதிர்ப்புணர்வால், உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் தேர்தல் அரசியல் ரீதியான இலாபங்களாகவே கருதப்படுகின்றன.

அத்துடன் ரஷ்யாவுக்கு எதிராக பிரித்தானிய துருப்புக்கள் உக்ரைனில் நேரடியாக களமிறக்கப்படுமா என்பதும் கேள்விக்குறியே. ஏனெனில் அமெரிக்காவை மீறி பிரித்தானியத் துருப்புக்கள் உக்ரைன் போரில் நேரடியாக கலந்து கொள்வது சாத்தியமற்ற ஒரு செயலாகவே கருதப்படுகிறது.

# இந்தியப் பிரதமரின் அமெரிக்க பயணம் ஒரு பார்வை!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி - அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையே அண்மையில் நடைபெற்ற வாஷிங்டன் சந்திப்பு இரு தரப்பாலும் திருப்திகரமானது என சொல்லிக் கொள்ளப்பட்டாலும், அதில் இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல அம்சங்களை அவர்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறார்கள் என்கிற எதிர்பார்ப்பை எழுப்புகிறது.

“இந்தியாவில் தயாரிப்போம், இந்தியாவே முதலில்” என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கருத்தாக்கத்தைப் போலவே “அமெரிக்காவே பெரியது, அமெரிக்காவே முதலில்” போன்ற கருத்தாக்கத்தை அதிபர் ட்ரம்ப் பிரதிபலிக்கிறார். தேசியவாத சிந்தனை மிக்க இந்தத் தலைவர்களின் கைகோப்பு, எதிர்கால புவிசார் அரசியலை வடிவமைப்பதில் இந்தியாவின் முக்கியத்துவத்தை எளிதில் புறந்தள்ளிவிட முடியாது என்பதை உணர்த்துகிறது.

அதிபர் ட்ரம்ப்பை பொருத்தவரை, மெக்ஸிகோ, கனடா மற்றும் சீனாவை இலக்கு வைக்க அவர் பயன்படுத்தும் புதிய ஆயுதங்கள், “வணிகம் மற்றும் வரிகள் விதிப்பு நடவடிக்கைகள்”. ஒருவேளை அமெரிக்க டாலரைக் குறைத்து மதிப்பிடும் வகையில் தனி நாணயம் போன்ற நடவடிக்கையை இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகள் முன்னெடுத்தால், பிறகு 100 சதவீத வரிகள் விதிக்கப்படும் என ட்ரம்ப் விடுத்த அச்சுறுத்தல், இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் உறுப்பு நாடுகளை கலக்கம் அடையச் செய்துள்ளது.

140 இந்தியர்கள், 23 நாடுகளைச் சேர்ந்த 28 வெளிநாட்டினர் கொல்லப்பட்ட “2008” மும்பை தாக்குதல் சதித் திட்டத்தை தீட்டிய டேவிட் ஹெட்லியுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த கனடா குடியுரிமை பெற்ற பாகிஸ்தானிய வம்சாவளி தஹாவூர் ஹூசைன் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த ட்ரம்ப் ஆதரவளித்திருப்பது பிரதமர் மோடியின் ராஜீய உத்தியின் வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. தற்போது ராணா லாஸ் ஏஞ்சலீஸ் பெருநகர தடுப்புக் காவல் மையத்தில் அடைக்கப்பட்டுள்ளார்.

கைவிலங்கு பூட்டப்பட்ட நிலையில் அண்மையில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் விவகாரத்தில், சட்டவிரோதமாக அமெரிக்காவுக்கு புலம் பெயர்ந்தவர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, அந்த இந்தியர்களை திருப்பி அனுப்பினால் ஏற்றுக்கொள்வதாக பிரதமர் மோடி அமெரிக்காவில் அறிவித்துள்ளார்.



இது அதிபர் ட்ரம்ப்பின் ராஜீய உத்திக்கு கிடைத்த வெற்றியாக அமெரிக்காவில் பார்க்கப்படுகிறது.

திறமையான இந்திய நிபுணர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஹெச்-1பி விசா திட்டத்தின் மூலம் திறந்த வாய்ப்புகளை வழங்க அமெரிக்காவை இந்தியா வற்புறுத்தியுள்ளது இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுவோருக்கு சாதகமான விஷயம்.

ஏற்கெனவே முந்தைய ஜோ பைடன் ஆட்சியின் போது நீடித்த ரஷ்யா மீதான அமெரிக்க தடை அச்சுறுத்தலுக்கு மத்தியில், ரஷ்யாவிடம் இருந்து எஸ்-400 ஏவுகணை அமைப்புகளை வாங்கியது மற்றும் சலுகை விலையில் ரஷ்ய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ததன் மூலம் அந்நாட்டுடனான தனது பாதுகாப்பு மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பை இந்தியா தக்க வைத்தது உள்ளிட்டவை அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டின.

இதேபோல, ஈரானுடனான இந்தியாவின் வர்த்தக உறவுகள் மீதும் அமெரிக்கா அதிருப்தி கொண்டிருந்தது. இருப்பினும், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளுடனான தனது உறவுகளை மேம்படுத்த ஈரானை முக்கிய எரிசக்தி ஆதாரமாகவும், ஒரு முக்கியக் கூட்டாளியாகவும் இந்தியா காண்கிறது. ஆனால், அந்நாடு மீதான அமெரிக்க தடைகள் ஈரானுடனான இந்தியாவின் உறவுகளைச் சிக்கலாக்கியுள்ளது. இதன் விளைவாக ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதியை இந்தியா குறைத்துக்கொண்டது.

இந்தியாவில் இந்த ஆண்டின் பிற்பகுதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள “க்வாட்” நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடியிடம் இசைவு தெரிவித்துள்ளார். இந்த வருகை மூலம் இரு நாடுகளின் நல்லுறவுகள் மேலும் வலுப்பட வாய்ப்புள்ளது. வர்த்தகம் மற்றும் வரிகள் விவகாரத்தில் மோடியும் ட்ரம்ப்பும் நேர்மறையான அணுகுமுறையைக் கையாள்வதன் பிரதிபலிப்பாக 50,000 கோடி டாலர் வருடாந்திர பரஸ்பர வர்த்தக இலக்கை நிர்ணயித்துக் கொள்ள இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. அநேகமாக இதற்கான ஒப்பந்தம் ட்ரம்ப்பின் இந்திய வருகையின்போது சாத்தியமாகலாம்.

ரஷ்யாவுடனான இந்திய உறவு, அமெரிக்காவின் மற்றொரு கவலையாகும். குறிப்பாக, உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு படையெடுப்புக்குப் பிறகும் ரஷ்யாவுடன் தொடரும் இந்திய உறவு குறித்து சில மேற்கு நாடுகளும் அதிருப்தி கொண்டுள்ளன. புதிய அதிபர் ட்ரம்ப் இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளப் போகிறார் என மேற்கு நாடுகள் உன்னிப்பாக கவனிக்கத் தொடங்கியுள்ளன. ட்ரம்ப்பிடம் நேரடியாக உரையாடி, சாத்தியமிக்க அமைதியை பிரதமர் மோடி பெற்றுத்தரக் கூடும் என உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி நம்புகிறார்.

ஒரே நேரத்தில் அமெரிக்கா, ரஷ்யா, உக்ரைன் ஆகியவற்றின் தலைவர்களுடன் நேசக்கரம் நீட்டும் இயல்பை

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக்குழு செயல்பாடுகளில் அரசியல் ஒத்துழைப்புக்கு இடமில்லை

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23

பாதாள உலகக்குழு செயல்பாடுகளில் அரசியல் ரீதியிலான ஒத்துழைப்புக்கு இடமில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் எச். எஸ். துய்யகொந்த தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

மேலும், சட்டவிரோத ஆயுத பரிமாற்றம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக்குழுச் செயல்பாடுகளில் அரசியல் ரீதியிலான ஒத்துழைப்பு அல்லது பாதுகாப்பு வழங்குவதற்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# சந்தேகத்துக்கிடமான முறையில் களுத்துறையில் ஒருவர் மரணம்!


களுத்துறை, பெப்.23

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெட்டுமகட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர் உயிரிழந்ததாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சடலத்துக்கு அருகில் கையடக்கத் தொலைபேசி மற்றும் துவிச்சக்கர வண்டி என்பன மீட்கப்பட்டன. (எ)

# அதிவேக வீதியில் பாரவூர்தி விபத்து



கொழும்பு, பெப்.23

கட்டுநாயக்க அதிவேக வீதியிலிருந்து துறைமுக வீதிக்கு நுழையும் இடத்தில் இங்குருகொட சந்திக்கு அருகில், பாரவூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாரவூர்தி வேகக்கட்டுப்பாட்டை யிழந்து வீதியை விட்டு விலகி அருகில் உள்ள கால்வாயில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றது. (எ)

# யூ.எஸ். எயிட் உதவி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் முற்றிலும் வேறுபட்ட காரணத்துக்காக செய்திகளில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையிலும் உலகம் பூராவும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்களுக்கு இதுகாலவரையில் மிகவும் பெரியளவில் நிதியுதவியைச் செய்த நிறுவனமாக யூ.எஸ். எயிட் விளங்கி வந்திருக்கும் நிலையில், நிதியுதவி இடைநிறுத்தம் பல தொண்டர் நிறுவனங்கள் அவற்றின் ஊழியர்களின் எண்ணிக்கையில் குறைப்புச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது மாத்திரமல்ல, சில தொண்டர் நிறுவனங்கள் ஏற்கெனவே மூடப்பட்டும் விட்டன என்றும் ஜெகான் பெரேரா கூறியிருக்கிறார்.

முன்னைய அரசாங்கங்களில் முக்கிய பொறுப்புக்களை வகித்த அரசியல்வாதிகள் ஊழல் முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களே மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக யூ.எஸ். எயிட் உதவி நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் எதிராக பிரசாரங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். தங்களது வீழ்ச்சிக்கு தவறான ஆட்சிமுறையும் ஊழல் முறைகேடுகளுமே உண்மையில் காரணம் என்பதை இந்த அரசியல்வாதிகள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. யூ.எஸ். எயிட்டின் நிதியுதவியைப் பெற்றுவந்த அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் சதி வேலைகள் காரணமாகவே தாங்கள் இடைநடுவில் அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்டதாக இவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்றும் ஜெகான் பெரேரா எழுதியிருக்கிறார்.

யூ.எஸ். எயிட் உதவி திடீரென்று இடை நிறுத்தப்பட்டதனால் இலங்கை உதவிகளைப் பெறுவதற்கு 'மாற்று வழிகளை நாடவேண்டியிருக்கும்" என்று அரசாங்க பேச்சாளரான சுகாதார, தகவல்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருக்கிறார். யூ.எஸ். எயிட் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அந்த நிறுவனம் இலங்கைக்கு 200 கோடி டொலர்களை (சுமார் 72 ஆயிரம் கோடி ரூபா ) உதவியாக வழங்கியிருக்கிறது என்று கூறப்படுகிறது.

கெடுபிடியுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்த காலப்பகுதியில் உலக நாடுகளில் சோவியத் யூனியனின் செல்வாக்கை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் முக்கியமான ஓர் அங்கமான வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைப்பதற்காக ஜனநாயக கட்சி ஜனாதிபதியான ஜோன் எவ். கென்னடியினால் 1961 ஆம் ஆண்டில் யூ.எஸ். எயிட் நிறுவனம் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கணேமுல்ல சஞ்சீவவை நீதிமன்றம் அழைத்து வந்தமை பற்றி விசாரணை

கொழும்பு, பெப்.23

கணேமுல்ல சஞ்சீவ என்ற சந்தேக நபரை சில தினங்களுக்கு முன்னர் கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவிருந்த சந்தர்ப்பத்தில் அவரை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்படவிருப்பதாக தகவல் கிடைத்தது. அதனால், அன்றைய தினம் மெய்நிகர் ஊடாகவே வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தகவல் ஊடக அமைச்சில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அச்சுறுத்தலுக்கு மத்தியில் கணேமுல்ல சஞ்சீவ கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டமை தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்ட 183 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் கடந்த ஆட்சிக் காலத்தில் பிரதேச அரசியல்வாதிகளால் தத்தமது பகுதிகளுக்கு நியமனம் பெற்றவர்கள் என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார். (எ)

# துப்பாக்கிச்சூடு சந்தேக நபர்களை தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு

கொழும்பு, பெப்.23

தங்காலை, மித்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடேவத்த சந்திக்கு அருகில் கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி உட்பட மூவரையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு வலஸ்முல்ல நீதிவான் நேற்றுச் சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் மூவரையும் தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்குமாறு பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

பொலிஸாரின் கோரிக்கையைக் கருத்தில் கொண்ட நீதிவான், சந்தேக நபர்களை 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் தந்தை, மகள் மற்றும் மகன் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சிறிய, நடுத்தர தயாரிப்புக்களை ஏற்றுமதி செய்வதற்கு அவதானம்

கொழும்பு, பெப்.23

தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் தயாரிப்புக்களை அதிகமாக ஏற்றுமதி செய்வது தொடர்பில் பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவில் அவதானம் செலுத்தப்பட்டது.

குறித்த குழு, பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியப்பெரும தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூடிய போதே இவ்வாறு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள அனைத்து வர்த்தகர்களும் ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு வருவதால், தேவையான விழிப்புணர்வு ஏற்கனவே அங்கு வழங்கப்பட்டு வருவதாக இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், அதற்கு அப்பாலும் விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டுமானால், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

வர்த்தகங்களைப் பதிவு செய்யும் போதே இது தொடர்பான விழிப்புணர்வை வழங்க வேண்டும் என்றும் அரச அதிகாரிகள் பாரம்பரிய முறைகளுக்கு அப்பால் பணியாற்ற வேண்டும் எனவும் குறித்த குழுவின் தலைவர் அறிவுறுத்தினார். இதற்காக டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். (எ)

# இந்தியப் பிரதமரின்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மோடி பெற்றுள்ளதால் அவரது பேச்சை இந்த மூன்று நாடுகளின் தலைமைகளும் கேட்கக்கூடும். ஒருவேளை இந்த தந்திரத்தில் மோடி வெற்றி பெற்றால், அது ரஷ்யா - உக்ரைன் பதற்றத்தைத் தணிப்பது மட்டுமின்றி, மோடியை சர்வதேசத் தலைவராக உலக நாடுகள் அங்கீகரிக்கும் சூழலை எளிதாக்கும் என்பது சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் பார்வை.

முந்தைய ஆட்சியாளரைப் போல இல்லாமல் சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் உறவைப் புதுப்பிக்க பிரதமர் மோடியின் துணை உதவக்கூடும் என்பது ட்ரம்ப்பின் கணக்கு. ஆனால், ஆசியா நோக்கி விரிவடைந்துவரும் அமெரிக்காவின் செல்வாக்கை சீனா விரும்பவில்லை.

ஏற்கெனவே தென்சீனக் கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிராக அமெரிக்கா குரல் கொடுத்து வருகிறது. இப்போது இந்தியாவுடனான நெருக்கம் மூலம் அமெரிக்கா மேலும் அருகே வருவதை தனது பிராந்தியத்துக்கான அச்சுறுத்தலாக சீனா காண்கிறது. மோடி - ட்ரம்ப்பின் சந்திப்பு குறித்து கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்களை பெய்ஜிங்கில் சந்தித்த சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன், ஆசிய - பசிபிக் முகமை என்பது அமைதி மேம்படுவதற்கான இடமாக நீடிக்க வேண்டுமே தவிர, புவி -அரசியல் மோதலை தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பாக இருக்கக் கூடாது என்று குறிப்பிட்டார். இந்த எதிர்வினை, உலக வல்லரசுகளுக்கு மத்தியில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவாகிவரும் இந்தியாவின் வளர்ச்சி குறித்த புரிதலை உணர்த்துகிறது.

அடுத்து என்ன செய்வார், எப்படி செய்வார் என்பதைக் கணிக்க முடியாத தலைவரான டொனால்ட் ட்ரம்ப்பை மிகவும் கவனத்துடன் பிரதமர் நரேந்திர மோடி கையாள வேண்டும் என சர்வதேச வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர். தனது தேச நலன்களுக்காக, இந்தியாவுடனான உறவை ட்ரம்ப் சமரசம் செய்துகொள்ள மாட்டார் என்பதற்கு அவரது கடந்த கால வரலாறு சாட்சி. எனவே, பரஸ்பர நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் செயல்பட்டால் அது இரு தரப்புக்கும் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்...

இதற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது- பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றினேன். நீதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நீதிமன்றங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. பாதாளக் குழுவின் செயற்பாடுகளுக்கு அமைவாகவே துப்பாக்கிச் சூடுகள் இடம்பெறுகின்றன.

அண்மைக்காலமாக துப்பாக்கிப் பிரயோகம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணையின் உள்ளடக்கத்தை பகிரங்கப்படுத்த முடியாது. திட்டமிட்ட ஒரு தரப்பினரால் தற்போது துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. பொதுமக்களின் பாதுகாப்பை அரசாங்கம் பொறுப்பேற்கிறது. தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது - என்றார். (அ)

## பயங்கரவாத...

குழுக்களும், அவர்களைப் பின்தொடர்பவர்களில் 1,400 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு மட்டும் 17 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்யப்பட்ட ஐந்து சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டாலும் அந்த குறைபாட்டை சரி வரச் செய்யும் பொலிஸார் சட்டத்தை மீறிச் செயற்படும் சம்பவங்களும் உள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக இருந்தால் அதற்கு ஒத்த புதிய சட்டமூலங்களை அறிமுகப்படுத்த வேண்டும். பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவதன் மூலம் மேலும் சிக்கல் ஏற்படும் - என்றார். (அ)

## புலிகள்...

பட்டியலும் இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தொழிற்படுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குழுக்களிடமிருந்து பெறப்படுகின்ற உதவியுடன் அந்த அமைப்பை மீள் உருவாக்குவதற்கான எத்தனிப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்த குற்றச்சாட்டில் குறித்த அமைப்புகளை தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம் மற்றும் கனேடிய தமி ழர் தேசிய அவை உள்ளிட்ட அமைப்பு கள் தடை செய்யப்பட்ட அமைப்புக ளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ் இளைஞர் அமைப்பு, எச்சியூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் குழு, தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு, ஜமாதே மிலாதே இப்ராஹிம் அமைப்பு, வில யாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ள்ஸ் என்பனவும் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த வர்த்தமானி அறிவித்தலில் 222 தனிநபர்களின் பெயர் விவரங்களும் அடங்குகின்றன. (அ)

## நாகை...

நிலையில், புயல், மழை, கடல் சீற்றம், சீதோஷ்ண நிலை உள்ளிட்ட காரணங்களால் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் சிவகங்கை கப்பல் போக்குவரத்துக்கு தயாரான நிலையில், இந்தியா-இலங்கை இடையிலான கப்பல் சேவை மீண்டும் நேற்று ஆரம்பமாகும் என கப்பலை இயக்கும் நிறுவனம் அறிவித்தது.

3 மாதங்களுக்குப் பின் நாகையில் இருந்து காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமாகியதால், இந்திய - இலங்கை சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த கப்பல் நேற்று பி.ப 1.30 மணிக்கு மீண்டும் காங்கேசன் துறையில் இருந்து நாகபட்டினம் நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

அத்துடன் இந்த கப்பல் சேவையானது செவ்வாய் தவிர்ந்த ஏனைய அனைத்து நாட்களும் இடம்பெறும் என கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-05)

## வெடுக்குநாறி...

கீழ் உள்ளதாக தெரிவித்து, அந்த திணைக்களம் மற்றும் நெடுங்கேணி பொலிஸாரால் பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கோள்வதற்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த வருடம் சிவராத்திரி தினமன்று மாலை 6 மணிக்கு பின்னர் சிவராத்திரி பூசைகளை செய்ய முற்பட்ட 8 பேர் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இது தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியதுடன், பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் அது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது. கைது செய்யப்பட்ட 8 பேரையும் வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்த நீதிபதி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கையும் தள்ளுபடி செய்தார்.

இந்நிலையில் இம்முறை சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலயத்தின் பூசகர் மற்றும் முக்கியஸ்தர் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டு அவர்களிடம் விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆலயத்தின் பூசகர் மதிமுகராசாவிடம் கேட்டபோது, இம்முறை சிவராத்திரி விரத பூசைகளை காலை முதல் மாலை 6 மணிவரை முன்னெடுப்பதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். 6 மணியின் பின்னர் பிறிதொரு பகுதியில் சிவனுக்கான இரவு அனுஸ்டானங்களை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சிவராத்திரி தினம் வெடுக்குநாறிமலையில் சிறப்பாக இடம்பெறும் என அவர் கூறினார். (அ)

## மன்னார்...

ஆயர்கள் பங்கேற்றனர்.

அத்துடன், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், வடக்கு மாகாண அதிகாரிகள், நீதிபதிகள், திணைக்கள தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், இந்திய உயர்ஸ்தானிக அதிகாரிகள், மக்கள் பங்கேற்றனர்.

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் கடந்த டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி மன்னார் மறை மாவட்டத்தின் 4ஆவது ஆயராக நியமிக்கப்பட்டார்.

பரிசுத்த பாப்பரசரினால் புதிய ஆயருக்கான நியமனம் வழங்கப்பட்டது.

அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை மன்னார் மறை மாவட்ட ஆயராக இருந்த இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், இன்று, மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் அருட்பொழிவு செய்யப்பட்டார். (அ)

# வேட்புமனு தாக்கல் முடிந்த பின்னரே உள்ளூராட்சி தேர்தல் திகதி அறிவிப்பு

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

கொழும்பு, பெப். 23

வேட்புமனு தாக்கல் முடிந்த பின்னரே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன் றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் பிர காரம், 14 நாட்கள் கட்டுப்பணம் செலுத்துவதற்கு ஒதுக்கப்படும்.

கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் நிறைவடைந்த பின்னர் 17 ஆம் நாள் நண்பகல் 12 மணிவரை மூன்றரை நாட்கள் வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதற்காக ஒதுக்கப்படும்.

இந்தநிலையில், வேட்புமனு தாக்கல் முடிவடைந்ததன் பின்னரே உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

## யாழில்...

உயிரிழந்தவரின் இறுதி கிரியைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடலை கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள இந்து மயானத்துக்கு எடுத்துச் சென்றவர்கள் மீது வீதியால் மிக வேகமாக வந்த வாகனம் மோதி விட்டு , அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்களை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் ஏனைய ஐவரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## வடக்கு...

(விகாரைகள்) அடிப்படையாகக் கொண்டு இன மற்றும் மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதி பதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதன்போது, கருத்து வெளியிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வடக்கில் மக்களின் உண்மையான தேவைக்கு அமைய வழிபாட்டு ஸ்தலங்கள்(விகாரைகள்) அமைக்கப்பட்ட விவகாரம் சம்பந்தமான பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும்.

குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குகின்றனர்.

இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

மதவாதம் மற்றும் இனவாதம் என்பன அரசியலில் இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும்.

வடக்கில் மக்களின் உண்மையான தேவைக்கு அமைய இந்தப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இது போன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களுடன் கூடிய காணிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு வழங்குவது தொடர்பிலும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர் இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,

"வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாடு முழுவதிலும் முப்படையினரின் பாவனையில் உள்ள காணிகள் தொடர்பில் மீண்டும் மதிப்பாய்வு மேற்கொண்டு காணிகளை விடுவிப்பது குறித்து எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என வும் தெரிவித்தார். (அ)

# அரசமைப்பு விவகார குழு நேற்று நியமனம்

கொழும்பு, பெப். 23

அரசியலமைப்பு விவகாரங்களுக்கான குழுவை நியமிப்பதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று அறிவித்தார்.

இந்தக் குழுவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபைத் தலைவர் பிமல் ரட்நாயக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன நாணயக்கார, பத்மநாதன் சத்தியலிங்கம் மற்றும் நிஹால் அபேசிங்க ஆகியோர் அடங்குவர். (அ)

## நாட்டை...

அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி கும்பல்களுக்கு இடையே பல மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அந்தக் குற்றங்களில் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்களையும் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படை அதிகாரிகளினால் கைது செய்ய முடிந்துள்ளதாகவும் கூறினார்.

அதேபோல், புதுக்கடைச் சம்பவத்திலும், மீதெனிய மூன்று கொலைகளிலும், குற்றவாளிகள் பற்றிய தகவல்களைப் பெற்றவுடன் பொலிஸார் உடனடியாகச் செயல்பட்டு, சில மணி நேரங்களுக்குள் கொலையாளியைக் கண்டுபிடித்து கைது செய்ய முடிந்தது. அண்மைக் காலங்களில், குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதில் பொலிஸார், முப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் விசேட அதிரடைப் படையினரின் உதவி பங்களித்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

இந்தக் குற்றவாளி கும்பல்களின் தலைவர்கள் மற்றும் குற்றவாளிகள் பலர் வெளிநாடுகளில் இருந்து செயல்பட்டு வருவதாகக் கூறிய அவர், இந்த சந்தேக நபர்களை இலங்கைக்குக் கொண்டு வந்து சட்டத்தின் முன் நிறுத்த இராஜதந்திர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாதாள உலக நடவடிக்கைகளை ஒடுக்கும் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய அவர், சமீபத்திய நாட்களில் சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வலியுறுத்தினார்.

இதேவேளை, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், முன்னர் வெளியிடப்படாத அம்சங்களை வெளிக்கொணர இது உதவியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# விவசாயிகள் மீது கை வைத்ததால்தான் பிரபாகரனின் கதை முடிவுக்கு வந்தது!

## கோட்டாவும் வீடு சென்றார் என்கிறார் ரோஹித



கொழும்பு, பெப். 23

**விவசாயிகள்மீது கை வைத்தால்தான் பிரபாகரனின் கதை முடிந்தது எனவும், கோட்டாபய ராஜபக்ஷவுக்குகூட ஆட்சியை கைவிட்டு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது எனவும் பாராளு மன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம்மீதான விவாதத்தில் உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயிகளால் ஆட்சியை தீர் மானிக்கவும் முடியும். கவிழ்க்கவும் முடியும் என்பதே உண்மை.

வேலுபிள்ளை பிரபாகரன் அன்று மாவிலாறுவை மூடினார். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். என்ன நடந் தது? இறுதியில் 2009 மே மாதம் பிரபாகரனின் கதை முடிந்தது. விவசாயிகள்மீது கை வைத்ததால் தான் அது நடந்தது.

அத்துடன், இரசாயன உரத் துக்கு பதிலாக இயற்கை உரத்தை கொண்டுவருவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ முற்பட்டார். இறுதியில் ஐந்து வருடங்களுக்கு முன்னரே அவரும் வீடு செல்ல நேரிட்டது.

எனவே, விவசாயிகள் பற்றி சிந்தித்து செயல்படுங்கள். அவ் வாறு இல்லாவிட்டால் தற்போ தைய அரசாங்கத்துக்கும் அதே நிலைதான் ஏற்படக்கூடும். -என் றார்.

ரோஹித எம்.பியின் உரை முடிந்த பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் அச்சுனா ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்பினார்.

"இவர் எமது தலைவர் பிர பாகரனை பற்றி கதைத்தார். 2009 இல் அவரின் கதை முடிக்கப்பட் டது எனவும் கூறினார்.

அப்படியானால் ஏன் இன்னும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப் படவில்லை" என இராமநாதன் அர்ச்சுனா சிங்கள மொழியில் கூற முற்படுகையில் அவரின் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது.

இதன்போது எழுந்த அமைச்சர் வசந்த சமரசிங்க, "இது ஒழுங்குப் பிரச்னை அல்ல, தேவையற்ற பிரச் னையை உருவாக்க முற்படுகின் றார்" எனக் கூறினார்.

இதனையடுத்து எழுந்த ரோஹித அபேகுணவர்தன,

"பிரபாகரனை இவர்களின் தலை வரென நான் விளிக்கவில்லை. ஹன் சாட்டை எடுத்து பாருங்கள். அவர் பயங்கரவாதி, இன்றும் அவர் பயங் கரவாதி, நாளையும் பயங்கரவாதி தான்." எனக் குறிப்பிட்டார். (அ)

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிதாரிகள் பொலிஸார் நடத்திய சூட்டில் கொலை!

கொழும்பு, பெப். 23

கொட்டாஞ்சேனையில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு நடத்தியதாக கூறப்படும் சந்தேக நபர்கள் இருவர், பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்

நேற்று முன் தினம் இரவு மறைத்து வைத்திருந்த ஆயு தங்களைக் காட்ட பொலிஸார் சந்தேகநபர்களை அழைத்துச் சென்றபோது, பொலிஸாரிடம் இருந்த துப்பாக்கியைப் பறித்து அவர்களைச் சுட முயன்ற போது, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர்கள் இருவரும் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்துள் ளார். காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை களுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

கொட்டாஞ்சேனை வீதியில் நேற்று முன் தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவரினால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரி ழந்தார். பின்னர் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் விசாரணைகளின்போது பொலிஸார் மீது துப் பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இன்சுலின் போதுமான அளவு இல்லாமல் நோயாளர் சிரமம்



கொழும்பு, பெப். 23

இன்சுலின் போதுமான அளவு இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிர மத்தை எதிர்கொண்டுள்ள தாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற் சங்கக் கூட்டணி தலைவர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

மாத்தறையில் உள்ள வைத்தியசாலைகள் உட்பட சில வைத்தியசாலைகள் நோயாளர்களுக்கு இன்சுலின் வழங்கப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,


மருத்துவ விநியோக பிரிவு இன்சுலின் விநியோகிக் கப்பட்டதாகக் கூறினாலும்,வைத்தியசாலைகள் தேவை யான அளவை விட குறைவாகவே பெறுகின்றன. இதன் விளைவாக, நோயாளர்கள் வெளிப்புற மருந்தகங்களி லிருந்து அதிக விலைக்கு அதனை பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் வைத்தியசாலைகளுக்கு அருகிலுள்ள மருந்த கங்களில் பதிவு செய்யப்படாத மருந்துகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ)

# ஹபரணையில் இந்து ஆலயத்தை உடைத்து பஸ் நிலையம் அமைப்பு!





கொழும்பு, பெப். 23

ஹபரணையில் இந்து ஆலயத் தின் முன்பகுதி உடைக்கப்பட்டு பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள் ளமை தமிழ் சமூகத்தவரிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஹபரணையில் அமைந்துள்ள இந்து ஆலயத்தின் முன்பகுதி இடிக் கப்பட்டு அதற்கிடையில் பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ள தோடு, பக்தர்கள் ஆலயத்துக்குள் செல்லும் வழியும் மறிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக தடுப்பு சுவர் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தியுள்ள துடன் கடும் எதிர்ப்பையும் தூண் டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

பெரும்பான்மையினரின் ஆதிக்க போக்கால் சிறுபான்மையி னர் அடக்குமுறைக்குள்ளாகுவதா கவும் சமூக ஆர்வலர்கள் வெளிப் படையாக விமர்சித்து வருகின்ற னர்.

இந்த சம்பவம் தொடர்பாக அதி காரபூர்வ விளக்கம் வழங்குமாறு அரசாங்கத்தையும், உள்ளூராட்சி அதிகாரிகளையும் மக்கள் கேட்டுள் ளனர். (அ)

# உலக வங்கி பிரதிநிதிகளுடன் சுகாதார அமைச்சர் சந்திப்பு

கொழும்பு, பெப். 23

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத் தியர் நலிந்த ஜயதிஸ்ஸ மற்றும் உலக வங்கியின் தெற் காசிய பிராந்திய சுகாதார, போஷாக்கு மற்றும் மக்கள் தொகை முகாமையாளர் கலாநிதி பெங் சாவோ ஆகி யோருக்கு இடையிலான சந்திப்பொன்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் இலவச சுகாதார சேவையின் தற்போதைய நிலை மற்றும் இலங்கையின் சுகாதாரத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்காக இதுவரை உலக வங்கி வழங்கிய பங்களிப்புகள், ஆதரவு மற்றும் மானியங்கள் குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கையில் இலவச சுகாதார சேவையை வலுப் படுத்துவதன் மூலம் தரமான மற்றும் சிறந்த சுகாதார சேவைகளை மக்களுக்கு தொடர்ந்து வழங்குவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்து சுகாதார மற் றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜய திஸ்ஸ, உலக வங்கியின் ஆசிய பிராந்திய சுகாதார, போஷாக்கு மற்றும் மக்கள்தொகை முகாமையாளர் கலாநிதி பெங் சாவோ உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கு அறி வித்தார். (அ)

# வெளிநாட்டிலிருந்தே கொலை ஒப்பந்தம்: ஹோட்டலுக்குள் வகுக்கப்பட்டது திட்டம்!

கொழும்பு, பெப். 23

கணேமுல்ல சஞ்ஜீவவை கொலை செய்வதற்குரிய ஒப்பந்தம் வெளிநாட்டில் தலைமறைவாகி யுள்ள பாதாள குழு தலைவர் கெஹெல்பெத்தர பத்மே என்ப வரால் வழங்கப்பட்டுள்ளது எனவும், பல மாதங்கள் திட்ட மிட்டே இக்கொலைச் சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதென அறியமுடிகின்றது.

நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணி போல் வேடமிட்டு சென்ற நபருக் கும், அவருக்கு உதவிய செவ்வந்தி என்ற பெண்ணுக்கும் இடையில் கெஹெல்பெத்தர பத்மேயின் சகா வான அவிஸ்க என்பவரே தொடர்பை ஏற்படுத்திக்கொடுத் துள்ளார் எனவும் தெரியவந்துள் ளது.

பாதாளக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்ஜீவவை சுட்டுக் கொன்ற நபர் இராணுவத்திலிருந்து வந்த பிறகு மஹரகம பகுதியில் ஓட்டோ சாரதியாக தொழில் செய்து வந்துள்ளார். அவர் இரு வருடங்களுக்கு முன்னர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமை யாகியுள்ளார்.

அறிமுகத்தின் பின்னர் செவ்வந் தியும், துப்பாக்கி தாரியும் நெருங்கி பழகியுள்ளனர். சம்பவம் நடை பெறுவதற்கு முன்னர் நான்கு நாட் கள் ஹோட்டலொன்றில் இருந்து திட்டம் வகுத்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

அதற்கு முன்னர் மினுவாங் கொடை பகுதியிலுள்ள வீடொன் றில் வாழ்ந்து வந்துள்ளனர்.

கெஹெல்பெத்தர பத்மேயின் போதைப்பொருள் வலையமைப் பில் முக்கிய முக்கிய பிரமுகராக செவ்வந்தி கருதப்படுகின்றார்.

புத்தளம் பகுதியில் சோதனை நடந்தபோது, வேகமாக வந்த வாக னமொன்றுக்குள் சூத்திரதாரி இருந் துள்ளார். அவரிடம் வினவிய போது,

தான் ஒரு சட்டத்தரணியென வும், இத்தாலியில் இருந்து வந்துள் ளதாகவும், கற்பிட்டி பகுதிக்கு செல்வதாகவும் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

அவர் தொடர்பில் சந்தேகம் ஏற்பட, சட்டம் தொடர்பில் சில கேள்விகள் எழுப்பட்டவேளையே அவர் சிக்கியுள்ளார்.

அவர் கொண்டுசென்ற பையில் இருந்து கைக்குண்டு ஒன்றும் மீட் கப்பட்டுள்ளது.

கணேமுல்ல சஞ்ஜீவ சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், அதற் குரிய ஒப்பந்தத்தை வழங்கிய பத்மே, வெளிநாட்டில் விருந்து வைத்துள்ளார் எனக் கூறப்படுகின் றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org